بسم الله الرحمن الرحيم

அல்கலாம்

AL-KALAM

பத்திராதிபர்:—கூ. அ. அப்துல் மஜீத்.

வால்யூம். 4	1927௵ ஆகஸ்டு௴	பகுதி. 8

இஸ்லாமும் தேசியமும்.

(இமாமுல் ஹிந்து மௌலானா அபுல்கலாம் ஆஜாத் அவர்கள் 10—6—27-ல் எழுதியது.)

இந்தியாவில் இந்தியாவுக்கு வெளியிலுள்ள இஸ்லாமிய நடவடிக்கையில் விசேஷமாய் முயற்சிக்கப்பட்ட கிலாபத்தியக்கத்தின் காலமே ஆச்சரிக்கக் கூடியது. இந்தியாவுக்கு வெளியிலுள்ள இஸ்லாமிய காரியங்களில் இவ்வளவு கவனம் எடுத்துக் கொள்ளுவது, இந்திய சமூகத்தின் எண்ணங்களில் உண்டாகக் கூடுமென்பதையோ, அல்லது ஒன்றுக்கொன்று வித்தியாசமுடைய பான் இஸ்லாமிஸம்—இஸ்லாமிய சகோதரத்வம், இந்து நேசனலேஸம்—இந்து தேசியம் ஆகிய இவ்விரண்டும் ஒரே நேரத்தில் சேர்ந்திருக்குமென்பதும், அக்காலத்தில் எவருடைய ஹிருதயத்திலும் உதிப்பு உண்டாயிருந்திருக்காது. அக்காலத்தில் ஹிந்து முஸ்லிம்கள் ஒற்றுமைத்த கிலாபத்தியக்கத்திற்கு ஒரு சாரார் விரோதிகளாய் இருந்தார்களென்பதில் சந்தேகமில்லை. அக்கிளர்ச்சி கிலாபத்தின் விஷயத்தோடு மட்டு

மில்லாது, தேசிய விஷயத்திலும் எவ்வளவு தூரம் முயற்சியெடுத்துக்கொண்டதோ, அவைகள் யாவற்றையும் அவ்விரோத வகுப்பினர் வெறுத்தனர்.

ஆனால், 1922-வது வருடம் அவ்வியக்கத்தின் அதிவூக்கத்தைத் தடுக்கப்பட்டபோழ்து, ஜனங்களின் கைகால்கள் வேலையின்றி வீணானதாகிவிடவே, பற்பலவிதமான தர்க்கங்களும், யோசனைகளும் வெளியாக வாரம்பமாயின. இந்திய பூகோள மெல்லைக்கப்புறமான நடவடிக்கையில், சமூக தேசிய ஊக்கம் இவ்வளவு திட்டத்திற்கு சேரக்கூடும் என ஒவ்வொருவனும் யோசிக்கத் தொடுத்தான். அதுமட்டுமல்ல, அவ்விஷயம் முஸ்லிம்களோடு ஒருபடி முன்சென்று, இஸ்லாமிய போதனையை அடைந்துவிட்டது. இப்பொழுது ஆயிரக்கணக்கான மூளைகளும், எழுதுகோல்களும் இஸ்லாம் மார்க்கப் படிப்பினையின் ஆத்மா சமூகக் கட்டுப்பாட்டிற்கு ஒற்றுமையானதா? அல்லது வேற்றுமையானதா? என்ற விஷயத்தில் தர்க்கம், யோசனை ஆகியவைகளைச் செய்வதிலிருந்து சௌகர்யமடையவில்லை.

இவ்விஷயம் வெளித்தோற்றத்தில் புதுமையாக விருப்பினும், உள்தோற்றத்தில் ஆச்சரிக்கத்தக்கதன்று. அதிகப்பான்மையோரின் அறிவை ஆராய்பவர்கள் இப்படிப்பட்ட விதற்பமான விஷயங்களில் சமூகத்தின் யோசனை, யொழுங்கு முறை ஆகியவைகளைத் தேடுகின்றனர். மாந்தர்கள் தொழிலற்று, ஹாவியாய் இருக்கும்போழ்து அவர்கள் மிதமிஞ்சி யோசனை செய்யவாரம்பிக்கின்றனர். கிரிகைகளில் சிக்குண்டிருப்போர்க்கு அதிகம் யோசனை செய்யத்தகுந்த சந்தர்ப்பம் கிட்டுவதில்லை. கைகால்கள் தொழிலற்றுப்போகும்போழ்து அவர்களுடைய யோசனையும், அறிவும் பொங்கி, தன்காரியத்தைச் செய்யவாரம்பித்து விடுகின்றன. முதலில் யோசனையின் முழு சக்தியும் வேலைசெய்வதில் மும்முறமாய் இருந்தது. இப்போழ்து வேலைசெய்வதன் ஸ்தானத்தை யோசனைக்காக ஒதுக்கப்பட்டுவிட்டது. முன்னம் எவனுக்கும் உயர்ந்த எண்ணத்தை யோசிக்க சௌகர்யமே கிடைக்கவில்லை. ஆனால், இன்று எவரை நோக்கினும் தேள்வையற்ற தர்க்கங்களில் மட்டுதிட்டமில்லாத எண்ணங்களையும், யோசனைகளையும், அபிப்பிராயங்களையும் கொள்ளுவோர்களாகக் காணப்படுகின்றனர்.

ஆலோசனையின் பலக் குறைவினாலேயே சமூக வாழ்க்கையின் நடவடிக்கையில் சக்தி நீங்கி, வேலையின்மைக்கு அஸ்திவாரமிடப்படுகிறது. சில சமயங்களில் வேலை செய்யத்தக்க சக்தி அறவே நீங்கிப்போய், உசும்பவும் முடியாதவாறு பலமற்றுவிடுகிறது.

ஒவ்வொரு சமூகத்தின் விஷயங்களின் உதாஹரணங்களை அவர்களின் சரித்திரங்களில் தேடிப் பார்க்கலாம். சமூக அபிவிர்த்தியின் காலத்தை நோட்ட மிடுவோமாயின், அக்காலத்தில் அச்சமூகம் சிரசு முதல் கால்வரையில் வேலை செய்யக்கூடியதாகத் தோன்றும். ஆனால், அதன் அபிவிர்த்திக் குறைவற்றுப்போகும் காலத்தை நோட்டமிடில், அச்சமூகங்கள் காரியஞ் செய்யக்கூடிய இடத்தில் வெறும் யோசனையை ஒன்றின்பின் ஒன்றாய் தோன்றச்செய்கின்றது. முந்திய விஷயத்தில் யோசனைக் கட்டுக்குட்பட்டு, கைகால்கள் தடையற்றிருந்தது. இரண்டாவது விதத்தில் கால்கைகள் தடுக்கப்பட்டு, அபிப்பிராயம் கொள்ளும் யோசனையோ கட்டுக் கடங்காமல் வானம் வரையில் மேலோங்க வாரம்பிக்கிறது. அரபியர்கள், ரோம், பாரிஸ் ஆகிய தேசத்து சிம்மாசனங்களைத் தலைகீழாய்ப் புரட்டியபோழ்து, அவர்களுடைய ஆலோசனையில் "களா, கதர்" உடைய மஸ்அலாக்களில் சந்தேகங்களுடைய எண்ணங்களைப் புகுத்தக்கூடாதென்ற நம்பிக்கையுடையவர்களாய் இருந்தனர். ஆனால், அவர்கள் "களா கதர், ஜபர், இக்தியார்" ஆகியவைகளில் ஆலோசனையைப் புகுத்தி, 50 க்கு மேற்பட்ட வழிகளை யேற்படுத்த ஆரம்பித்தபோழ்து, அவர்களின் கிலாபத்து சிம்மாசனங்கள் யாவும் மிலேச்சர்களான தாத்தாரிகளின் சுருசுருப்பான பாதங்களை வந்தடைந்தன.

இன்றும் ஐரோப்பிய சமூகங்களில் அவ்வுதாஹரணங்கள் வெகு ஸ்பஷ்டமாகத் தோன்றிக் கொண்டிருக்கிறது. இங்கிலோ ஸஸ்கன் வகுப்பினருக்கு எதிரிடையாய் பிரான்ஸி சமூகத்தினர் ஆலோசனை, அபிப்பிராயம் ஆகியவைகளை யதிகம் நேசிக்கின்றனர். ஆகையால் அவர்கள் தாங்களடையும் இழிய நிலைமையை எவ்விதத்திலும் தடுக்க சக்தியற்று விட்டனர்.

1920-வது வருடத்து நடவடிக்கையின் ஆலோசனை, அபிப்பிராயம் ஆகியவைகள் லகானற்றதாக ஆகிவிடுவதற்கு அதிக சௌகர்யம் அளிக்கப்படவில்லை. மஹாத்மா காந்தி அவர்கள் கிலாபத்து விஷயம் கபடமற்றதாகவும், காரியசித்தி யுடையதாகவுமுள்ள கோலத்தைக்கண்டு யெழுந்து நின்றார். அவர் முஸ்லிம்கள் கோரும் உரிமை நியாயமானதா? அல்லவா? என்று யோசிப்பதை அனுவசியமானதாக நினைத்து, ஹிந்துக்களை முஸ்லிம்களோடு சேர்த்துவிட்டால், இருவரின் ஹிருதயத்திலும் நெருங்கிய ஒற்றுமை ஏற்படும். தேச வாழ்க்கையில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் அபிவிர்த்தியின்மையில், அதைக்காண வேறு வழியைத் தேடவேண்டியது அதியவசியமானதாக விருக்கவில்லை. ஆகையால், அதன் முடிவு சில மாதங்

களில் பொதுவான ஓர் கிளர்ச்சியாக யேற்பட்டது. கிலாபத்தின் கோரிக்கை ஹிந்து முஸ்லிம்களின் ஒற்றுமையான கோரிக்கையாக மாறிவிட்டது. ஆகவே, நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான ஹிந்துக்கள் அக்கோரிக்கையை தேசியத்தின் அதிமுக்கியமானதாக எண்ணி, முஸ்லிம்கள் வெளியிடுவதைப் போன்று, தங்கள் எண்ணத்தை வெளியிட்டனர். ஆனால், சிற்சில சமயங்களில் முஸ்லிம்களைப் பார்க்கினும் ஒருபடி முன்னணியி லிருந்தார்களென்றும் கூறப்படுகிறது.

செய்கையில் எடுத்துக்கொண்ட நோக்கத்தின் ஊக்கம் முடிவடைந்ததும், வேலை செய்வதைத் தடுக்கக் கூடிய நடவடிக்கைகள் ஆரம்பமாயிற்று. அதனால், சின்னாட்களுக்கு முன் தேசத்தில்விசேஷமாய் மதிக்கப்பட்டு வந்த வேலை, சந்தேகத்துடைய கோரிக்கையாக மாறிவிட்டது. ஆலோசனைகளும், அபிப்பிராயங்களும் பற்பல விதமாய் உதிக்கவாரம்பித்தன. துருக்கியர்களுக்கு நியாயம் செய்ய வேண்டுமென்று கோரப்பட்ட காலத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் சிறைச்சாலையை யடைந்தார்கள். அவ்வமயம் இக்கோரிக்கையை பற்றி இவ்வளவு தூரம் முயற்சிப்பது இந்திய சமூகத்துடன் ஒற்றுமைக்குட்பட்டிருக்குமா? அல்லவா? என்பதைச் சிந்தனை செய்யவில்லையாயினும், இதுபோழ்து ஒவ்வொரு மனிதனின் ஹிருதயமும் அதைப்பற்றி யோசிக்கின்றது. அதை யோசிக்காத மூளையும், எழுதாத கோலும் கிடையா.

ஒருபுறம் இவர்கள் பற்பலவிதமாய் ஆலோசனையைப் பெருக்கிக்கொண்டிருக்கின்றனர். மறுபுறம் எழுதுகோலுடைய முஸ்லிம்கள் இருக்கின்றனர். இவர்களிடத்தும் உண்மையான விஷயங்களில்லை. ஆகையால், இவர்களும் ஆச்சரிக்கக் கூடிய விதத்தில் அதிகமாய் சிக்குண்டிருக்கின்றார்கள். முன்பு பிரசுரிக்கப்பட்ட அல்ஹிலாலின் பக்கங்களில் இஸ்லாமின் அதிவிரிவான நோக்கம் தேசியத்தில் குறைவுற்றதல்ல வென்பதின் தர்க்கங்களை நோட்டமிட்டிருக்கின்றனர். ஆகையால் அதற்கு அந்த முஸ்லிம்கள் "இஸ்லாம் தேசியத்தின் விரோதியென்றும், யாதொரு முஸ்லிமையும் தேசியவாதியாக ஆகுவதற்கு இஸ்லாம் அனுமதிக்கவில்லை என்றும்" தப்பர்த்தங்கொண்டிருக்கின்றனர். வேறு சிலர் இந்திய முஸ்லிம்களின் ராஜீயம் ஐயறிவற்ற, குறுகிய நோக்கமுடையது. இந்தியாவுக்கு வெளியிலுள்ள இஸ்லாமிய விஷயங்களில் முஸ்லிம்கள் எடுத்துக் கொள்ளும் முயற்சியை, தங்கள் சுயதேயத்து விஷயங்களில் எடுத்துக்கொள்ளாததைப் பார்த்து, முஸ்லிம்களின் விரிந்த சம்பந்தங்களின் உணர்ச்சியே இவ்

விஷயத்திற்குப் பொறுப்பாளியென எண்ணிக்கொள்ளுகின்றார்கள். இஸ்லாமின் பரவிய நோக்கம் சமூகக் கட்டுபாட்டுடன் ஒற்றுமையாகிறதில்லை. அது சமூகத்திற்காக அவசியமுமில்லை. ஆகையால், அதற்கு விடை கொடுத்தனுப்பி விடவேண்டியது என அவர்கள் மொழிகின்றனர். இஸ்லாமின் நோக்கம் குறுகியதாக விருப்பினும், அல்லது விஸ்தீர்ணமாகினும் அவைகள் இரண்டும் அதிமுக்கியமானவைகளே. அவைகளைப்பற்றிய உண்மைகளை மத்திபத்தில் தேடவேண்டும்.

(வரும்)

சங்கைபெற்ற உலமாக்களின் மார்க்க தீர்ப்பு.

(ஜனுப் ஹேச். எம். அப்துல்காதர் சாஹிபு சிங்கையிலிருந்து எழுதுகிறார்.)

சுத்த சத்திய இஸ்லாமிய சகோதரர்காள் !

வட இந்தியா மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி ஸாஹிபின் ஷிர்க்கான போதனை, கொள்கைகளைக் கண்ட, எமது சங்கைபெற்ற உலமாக்கள், மிர்ஸாயி கோஷ்டியினர் மீது குப்ருடைய (பத்வா) மார்க்க தீர்ப்பு வரைந்துள்ளார்கள். ஹிஜ்ரீ 1311-வது வருடம் சென்னை மௌலானா "உபைதுல்லா ஸாஹிபு கிப்லா" அவர்களால் மார்க்க தீர்ப்பு வரையப்பட்டு, அது பல ஊர்களிலுள்ள பிரதானமான உலமாக்களுடைய கையொப்பங்களுடன் வெளியாகியிருக்கிறது. வட இந்தியாவில் போபால், தாஜூன், ஸஹாரன்பூர், ராய்பூர், பதாயூன், லக்நௌ, ஹுஷ்யார்பூர், முல்தான், பிஷாவர் முதலிய 30 ஊர்களின் பிரபல்யமான சுமார் 150 உலமாக்களுக்கு மேல், (பத்வா) மார்க்க தீர்ப்புகள் வரைந்தும், அவற்றில் அன்னவர்கள் கையொப்பஞ் செய்தும், அத்தீர்ப்புகளைப் புத்தக ரூபமாக வெளியாக்கியுள்ளதை எனது முஸ்லிம் சகோதரர்களில் அநேகர் நன்கறிந்திருக்கலாம்.

அப்பத்வாக்களில் மிர்ஸாயிகளுடன் உறவு கொள்ளக்கூடாதென்றும், முஸ்லிம்களின் மாதர்களை அன்னவர்களுக்கு மங்களம் புரிந்து கொடுக்கலாகாதென்றும், காதியானிகளின் மாதர்களை முஸ்லிம்கள் விவாகம் செய்யக்கூடாதென்றும், கலியாணமானபின் எவரேனும் மிர்ஸாயிமதத்தைத் தழுவிக்கொள்ளுவாராயின்; தக்ஷணமே

அவர்களின் நிகாஹ் பிரிந்துபோய் விடுமென்றும், முஸ்லிம்களின் கபரிஸ்தானங்களில் மிர்ஸாயிகளுக்கு இடங்கொடுக்கக் கூடாதென்றும், அவர்களின் வேட்டை நாய், இராஜாளி ஆகியவைகளால் வேட்டையாடப்பட்ட, அல்லது அவர்களால் அறுக்கப்பட்ட பிராணிகளை முஸ்லிம்கள் புசிக்கக்கூடாது என்றும் வரைந்திருக்கிறார்கள். சுருங்கக் கூறுமிடத்து முஸ்லிம்களுடன் கொண்டாடும் உறவைப் போல் மிர்ஸாயிகளுடன் உறவு கொள்ளக்கூடாதென்றும் எமது உலமாக்களால் மார்க்க தீர்ப்பு வெளியிடப்பட்டது. ஆகவே, இத் தீர்ப்பின்படி முஸ்லிம் ஆண், பெண் அனைவோர்களும் பின்பற்றி நடக்கவேண்டியது கடமையாகும். இவைகளைக் கண்டாவது அந்த மிர்ஸாயி கோஷ்டியினர் நேர்வழிப்பெற முயலாமல், ஓரே பிடிவாதமாயிருக்கின்றனர். இறைவன்பால் மன்னிப்பு கேட்டு, நேர் வழிபெறுவார்களாயின் மிகவும் நலம். தௌபாவுடைய வாசல் இப்பொழுதும் திறக்கப்பட்டே இருக்கின்றது.

விளக்கம்.

உண்மைக்குரிய சகோதரர்காள்! நாம் மேலே வரைந்துள்ள விஷயங்களால் நீங்கள் விளங்கிக்கொண்டதென்ன?

(1) வஹீயானது நபிமார்கள் அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் அவர்களுக்கே வருமன்றி, வேறெவருக்கும் எம்முகாந்திரத்தைக் கொண்டும் வரவேமாட்டாது. வஹீ வருகிறதென்று எவரேனும் கூறுவார்களாயின், அஃது ஆதாரமற்ற பொய்க்கூற்றாகும். நபிகள் பெருமான் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களே கடைசி நபியாகவிருப்பதால், அன்னவர்களுக்குப் பின் நபியுமில்லை; வஹீயுமில்லை.

(2) இல்ஹாம் அவ்லியாக்களுக் குண்டாகுமெனினும், அவ்வில்ஹாமின்படி இதரர்கள் நடக்கவேண்டுமென்ற கட்டாயமில்லை. தவிரவும், அஃது சுத்த சத்திய திருமறைக்கும், நன்னபி வசனங்கட்கும் உட்பட்டிருக்கவேண்டும். இல்ஹாமில், "இல்ஹாமே ரஹ்மானி," "இல்ஹாமே ஷைத்தானி" யென இருவகையுண்டும். ஆனதால், மிர்ஸாவின் இல்ஹாம் ஷைத்தானியாகும்.

(3) ஹஜ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் விண்ணுலகில் உயிருடன் ஜீவித்துக்கொண்டிருக்கிறார்கள். இறுதிகாலத்தில் வானத்திலிருந்து இறங்கி, தஜ்ஜாலைக் கொல்லுவார்கள். மிர்ஸா சாஹிபு எம்முகாந்திரத்தைக் கொண்டும் நபி ஈஸா அலைஹிஸ்ஸலாமாக வாகமாட்டார்.

(4) ஹஜ்ரத் மஹ்தீ அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கடைசிகாலத்தில் திருமக்காமா நகரத்தில் வெளியாவார்கள். அவர்கள் நாயகம் ரஸூலே கரீம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் பரிசுத்த * வம்சத்தைச் சேர்ந்தவர்; முஹம்மது என்ற பெயருடையவராகும். மிர்ஸா மொகல் பெயர் குலாம் அஹ்மது; இருவருக்கும் யாதொரு சம்பந்தமுமே கிடையாது; ஆதலின், மிர்ஸா மஹ்தீ அலைஹிஸ்ஸலாமல்ல.

(5) முஜத்திது மதத்திற்கு புத்துயி ரளிக்கவேண்டும்; அவர் கல்வியில் சிறந்தவரென்று அவர் காலத்தின் உலமாக்கள் போற்றி ஒப்புக்கொள்ளவேண்டும். மிர்ஸா புத்துயிரளிக்கவில்லை; அந்தகாரத்தைப் பரப்பினர்; உலமாக்கள் அவருக்கு உண்மையுணர்த்தி, நேர் வழிகாட்டினர்; கடைசியில் குப்ருடைய மார்க்க தீர்ப்பு வரையப்பட்டது. ஆதலின், மிர்ஸா முஜத்திதுக்கும் யோக்கியதை யுடையவரல்லர்.

(6) தஜ்ஜால் இக்காலத்திலில்லை; அவன் ஒருவனை யன்றி பலரன்று; ஒற்றைக்கண்ணன்; கடைசிகாலத்தில் வெளிப்படுவான்.

(7) யாஜூஜ், மாஜூஜ் இக்காலத்தில் நடமாடிக்கொண்டில்லை. சுல்தான் ஸிக்கந்தர் துல்' கர்னைன் அவர்களால் செப்புக் கோட்டையில் தடை செய்யப்பட்டிருக்கின்றனர். பிற்காலத்தில் வெளியாவார்கள்.

என்னருமை சோதரர்காள்! மற்றொரு விஷயத்தையும் கவனிக்க வேண்டியதவசியம். அஃதாவது: ஒரே மனிதன் நபியாகவும், ஈஸாவாகவும், மஹ்தியாகவும், முஜத்திதாகவும் எங்ஙனமிருக்க முடியும்? சொற்ப அறிவுபடைத்த எவரும் இக்கூற்றை ஏற்றுக் கொள்ளுவாரா? இஃதன்றி, எமது சங்கைபெற்ற உலமாக்களின் (பத்வா) மார்க்க தீர்ப்பின்படி, மிர்ஸாயி கோஷ்டியினருடன் எவ்வித சம்பந்தமும் வைத்துக் கொள்ளக் கூடாதென்பதே.

சகோதரர்கள் எச்சரிக்கையாக விருக்கவேண்டும்.

எனதாருயிரைக் கொள்ளைக் கொண்ட நேசர்காள்! காதியானி, அஹ்மதியர்களின் மாயவலையிலகப்பட்டு, ஈமானைப்போக்கிக் கொள்ளாதீர்கள். காதியானிகள் பற்பல விதமாய் சூழ்ச்சிகள் செய்துக் கொண்டிருக்கின்றனர். தந்திரமான விஷயங்களைக்கூறி, நுங்களை

* ஹஜ்ரத் இமாம் மஹ்தீ அவர்களின் தகப்பனார் ஹஜ்ரத் இமாம் ஹஸன் அவர்களின் சந்ததியிலுள்ள அப்துல்லாஹ் என்பவராகும். அவர்களின் தாயார் ஹஜ்ரத் இமாம் ஹுஸைன் அவர்களின் சந்ததியிலுள்ள ஆமினா யென்பவராகுவார். ரலியல்லாஹு அன்ஹும் அஜ்மயீன்.

யேமாற்றப் பார்க்கின்றனர். எவரேனும் காதியானி மதத்தைத் தழுவுவார்களாயின், தக்ஷணமே காபிராய்ப் போவார்களென்பது திண்ணம். எமது உலக ரட்சகர் ரஸூலே முகர்ரம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் 1300-வருடங்களுக்கு முன்பே "கடைசி காலத்தில் பொய்யர்களான தஜ்ஜால்கள் கிளம்பி, நீங்களும், உங்கள் பிதாக்களும் கேள்விப்படாத (நூதன) விஷயங்களைக் கூறுவார்கள். (ஆதலின்,) உங்களுக்கும், அவர்களுக்கும் எச்சரிக்கை செய்கிறேன்" என்று திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்கள். (ராவி அபீஹுரைராரலி)

அவ்வாறே இக்காலத்தில் பலவிதமான தஜ்ஜால்களான பொய்யர்கள் கிளம்பி, தம்மனம் போனபடியெல்லாம் விஷயங்களைக்கூறி, பொதுமக்களை அந்தகாரத்திலாழ்த்த முயற்சிக்கின்றனர். ஆதலின், எமது நபிகள் பெருமான் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் எச்சரிக்கை செய்துள்ளபடி, பொய்யர்களின் பசப்பான விஷயங்களை நம்பி, ஈமானைப் போக்கிக் கொள்ளாதீர்கள். எமது நபிகள் பெருமான் அவர்கள் கூறாத விஷயங்களெல்லாம் மிர்ஸா சாஹிபு கூறியுள்ளார்; அவைகள் இவருக்கு எவ்வாறு தெரிந்தது? அவ்வாறு தெரியவேண்டிய காரணமென்ன? இஃதெல்லாம் பொது ஜனங்களை தன்வயப்படுத்தி, தான் கீர்த்தி வாய்ந்தவராக விளங்க வேண்டுமென்பதே மிர்ஸாவின் எண்ணமாகும். மிர்ஸா எம் நபிகள் பிரான் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களைக் கொண்டு பொறாமைக் கொண்டவராகயிருந்தார். இதற்கு அவரின் நூற்களே போதிய சாட்சியாக விருக்கின்றன. இறைவன் நமது இருலோக ரட்சகர் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை நோக்கி, "தங்களைப் படைத்திராவிடில், வானம், பூமி முதலியவைகளை படைத்திருக்கமாட்டேன்" என்றும், "தங்களை யுலகோர்க்கு ரஹ்மத்தாக அனுப்பினேன்" என பலவாறாய்ப் புகழ்ந்து கூறியுள்ளான். இவ்வளவு மேன்மையும், சிறப்பும் வாய்ந்த எமது ஈருலக அதிபர், ரஸூலே கரீம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கு இறைவன் தெரிவிக்காத இரகசியங்களை கேவலம்! காதியானியில் தோன்றிய இந்த மிர்ஸாவுக்கு வெளியாக்கிவிட்டானும்! என்ன ஆச்சரியம்! 'கேழ்வரகில் நெய்வடிகிற தென்றால், கேட்பவர்களுக்கு புத்தியில்லையோ? பூனை தன்கண்களை மூடிக்கொண்டால் உலகமே இருளடைந்துவிடுமோ'?

"முஸைலமதுல் கஸ்ஸாபு" முதலியவர்கள் நபித்துவத்தின் தாவாச்செய்தனர். அவர்கள் தம் தாவாவில் காரியசித்தி யடைந்

தார்களா? இல்லை. ஆனால், அதி சீக்கிரம் இவ்வுலகத்தை துறந்தார்கள். இன்னமும் எத்துணை பொய்யர்களான வழிகேடர்கள் தோன்றியபோதிலும், எம் பரிசுத்த இஸ்லாத்தின்முன் நிலைத்து நிற்கமுடியாது. ஆகையால், இன்னோர்களின் பொய்க்கூற்றில் சிக்காது, முஸ்லிம்கள் எச்சரிக்கையாகவிருக்கவேண்டியது மிகவும் அவசியமாகும். ஈமானென்னும் மாப்பெருஞ் சோதியை இக்காலத்தில் ஒவ்வொருவரும் காப்பாற்றவேண்டியது அத்தியாவசியமாகும். ஈமான் போய்விடுமாயின், அந்தோ! என்றென்றைக்கும் நரகவேதனையையே அடைய நேரிடும். எமது உலக ரட்சகர் கட்டளையின்படியும், சுத்த சத்திய திருமறை கட்டளைப்படியும் நடந்துவர வேண்டியதே ஒவ்வொரு உண்மை முஸ்லிமின் முதற்கடமையாகும்.

"என் உம்மத்தில் குழப்பம் உண்டாயிருக்கும்போது, எவன் என் சுன்னத்தை (வழி) பற்றிப்பிடித்துக் கொள்கிறானோ, அவனுக்கு நூறு ஷஹீதுகளின் பதவிகிடைக்கும்" (ராவி ஜாபிர் ரலி) என நமது நபிகள் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்கள். ஆதலின், இக்காலத்தில் நாம் "ஸுன்னத்தே ரஸூலைப்பின்பற்றி, நடந்து வருவதே சாலச் சிறந்ததாகும். அஃதே ஈடேற்றத்திற்குரிய வழியாகும்".

"நபியே! (உங்கள் உம்மத்துகளுக்கு) சொல்வீராக! நீங்கள் அல்லாஹ்வின்மீது பிரியம் வைப்பவர்களாக விருப்பீர்களாயின், (நீங்கள்) என்னைப் பின்பற்றுங்கள். (அவ்விதம் நீங்கள் என்னைப் பின்பற்றி நடப்பீர்களாயின்,) அல்லாஹ் உங்கள்மீது பிரியம் வைப்பான். (அல்குர் ஆன்) என அல்லாஹுதஆலா தனது குர்ஆன் ஷரீபில் ஆக்ஞாபித்திருக்கிறான். ஆகவே, எம்பெருமான் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களைப் பின்பற்றுவதெவ்வாறு? காதியானி, அஹ்மதியர்கள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களைப் பின்பற்றி நடந்துவருவதாக சொல்லிக்கொண்டு, மிர்ஸாவை நபி என்றும், ஈஸா, மஹ்தீ, முஜத்திது என பலவாராய்க் கூறுகின்றனரே எவ்வாறு? அவ்விதம் பின்பற்றுவது அணுவளவும் பிரயோஜனப்படாது. குர் ஆன் ஷரீபு, ஹதீது ஷரீபு இவைகளின்படி உள்ளன்புடன் பின்பற்றி நடந்துவருவதே பூரணமான ஈமானுக்கு அடையாளமாகும். அஃதே ஈருலகிலும் ஜபசீலர்களாக விளங்குவதற்குரிய வழியாகும்.

மிர்ஸாயிகளுக்கோர் எச்சரிக்கை.

ஏ! மிர்ஸாயி கூட்டங்களே! உங்கள் குருவின் கொள்கைகளைப் பின்பற்றி மோசம் போகாதீர்கள். அப்படியீங்கள் குருவையும்,

அவரின் சிஷ்யர்களால் நடத்தப்பெறும் பத்திரிக்கைகளையும் ஆதரிப்பீர்களாயின், இகபரத்திலும் நஷ்டவாளிகளாகவே இருப்பீர்கள். உங்கள் குருவின் போதனைகளோ, குர்ஆன், ஹதீதுக்கு முற்றும் விரோதமான வைகளாயிருக்கின்றன. நியாய புத்தியைக்கொண்டு நீங்கள் சற்று கவனித்துப் பாருங்கள். மிர்ஸாவின் அந்தகாரக் கொள்கைகளையே பின்பற்றி யொழுகிவருவீர்களாயின், சந்தேகமின்றி மறுஉலகில் நஷ்டவாளிகளாய்ப் பரிதவிப்பீர்கள். உங்கள் குருவின் கொள்கைகளைப் பரத்துவதற்காக, பகீரத முயற்சிகள் செய்துவருவதை அடியோடு விட்டு, நேரான வழியில் சீராக நடந்து, ஜயசீலர்களாக விளங்க முயற்சி செய்யுங்கள். குர்ஆன், ஹதீதுகள் பூரண வழிகாட்டிகளாயிருக்கின்றன. இவ்விரண்டைப் பின்பற்றி நடந்து வரவேண்டியது சாலச்சிறந்ததாகும். இவ்விரண்டிற்கும் விரோதமாய் நடப்பவர்கள் நரகவாதிகளேயாகும். நீங்கள் எமது நபிகள் பிரான் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் உம்மத்துகள்தானென்று பறைசாற்றுகின்றீர்கள். இத்துடன் மிர்ஸாவை நபி, ஈஸா, மாஹ்தீ, முஜத்தித்தென்றும் கூறுகின்றீர்கள். இவ்வாறு கூறும் நீங்கள், நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் உம்மத்துகளாக பெவ்வாறாதல் முடியும்? ஒருக்காலும் முடியாது.

சாக்கு போக்கு சொல்லுவதால் எவ்வித பிரயோஜனமும் கிடையாது. உண்மையில் நீங்கள் எமது நபிகள் பிரான் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் சிறந்த உம்மத்துகளாகவே இருக்கவேண்டுமென்ற நல்லெண்ண மிருக்குமாயின், அம்மா சற்ற உலக ரக்ஷகர் ரஸூலேகரீம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் கட்டளைக்கு முற்றும் தலைசாய்த்து பின்பற்றி வருவதே, அவர்களின் உம்மத்துகளென்பதற்கு அடையாளமாகும். அவற்றை யேற்றுக்கொண்டு நடந்து வருவதே மிகவும் நலமாகும். நமது கொள்கையை நாம் விடமாட்டோம், அதன்படியே நடந்து வருவோமென்று பிடிவாதம் செய்வீர்களானால், அது உங்களிஷ்டம். "உங்களுக்கு உங்கள் மார்க்கம், எங்களுக்கு எங்கள் மார்க்கம்" (அல்குர்ஆன்) என்ற ஆயத்தைக் கூறுவதைத் தவிர, வேறொன்றும் சொல்லப்போவதில்லை. இத்துடன் என் வியாசத்தை நிறுத்தி, இதன் கீழ் வரப்பெற்றது ஆவைக்கொண்டு முடிக்கிறேன்.

துஆ-ஆசீர்வாதம்.

அடியார்கள்மீது அருள்புரியும் நாயகா! நாங்கள் உனக்கு மாறு செய்த அடிமைகளாகவிருப்பினும், சங்கை பொருந்திய நபிகள் சிரோ

மணி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் பொருட்டால் எங்களின் பிழைகளைப் பொருத்து, இத்தரணியில் புதிய மார்க்கத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்ற, வழிகேடர்களான அஹ்மதியர், காதியானியர் ஆகியோர்களின் மாய வலையில் சிக்காது, ஸாலிஹான வர்களின் கூட்டத்திலாக்கி, 'ஈமான்' என்னும் நன்னம்பிக்கையின் பிரகாசத்துடனே "ஸுன்னத் வல் ஜமாஅத்" முஸ்லிம்களென்னும் உயர் நாமத்துடனே, "ஷிர்க், பித்அத்" என்ற இணைவைத்தல், நவீனங்களை விட்டும் எங்களைக் காப்பாற்றி ஹனபி, மாலிகி, ஷாபிஇ, ஹன்பலி என்னும கூட்டங்களிலொன்றிலாக்கி, யருள்புரிவாயாக! ஆமீன்; யாரப்பில் ஆலமீன்.

திரு நபியின் குணாதிசயங்கள்.

(ஜனாப் அப்துல்ஹை கமாலி எழுதியது.)

நமது நபிகள் நாயகம் முகஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின், முபாரக்கான சரீரத்தைப்பற்றி முஹத்திதீன்களும், சரித்திர ஆராய்ச்சிக்காரர்களும் நீண்டதொரு விபாசத்தை யெழுதியுள்ளார்கள். அஃதாவது:—நபியவர்கள் நடுத்தரமான சரீரம், இலங்கக்கூடிய முகம், பெரிய தலை, வட்டமான தாடி, சிவந்த கழுத்து, பிரகாசிக்கும் கன்னம், அகலமான நெஞ்சு ஆகியவைகளுடையவர்களாக விருந்தார்கள். நபியவர்கள் இம்மை, மறுமை ஆகியவைகள் சம்பந்தமாய் சதா சிந்தனையுள்ளவர்களாகவும், கொஞ்சமாய் பேசக் கூடியவர்களாகவும், தேள்வையின்றி பேசாதவர்களாகவும் இருந்தார்கள். துன்யாவுடைய வேலைகளில் எதுவும் குந்தகம் ஏற்பட்டால் அதற்காக கோபிக்க மாட்டார்கள். இனிய வார்த்தை பேசுவதைக் கொண்டு புகழப்பட்டிருந்தார்கள். அல்லாஹுத ஆலாவால் அளிக்கப்பட்ட பாக்கியங்களுக்கு நன்றி செலுத்தக் கூடியவர்கள். எவரையும் பழிக்கமாட்டார்கள். தங்களுக்கு எதிரிகளால் ஏற்படும் துன்பங்களுக்கு பதில் செய்யமாட்டார்கள். எந்த வஸ்துவையும் பிரியப்படமாட்டார்கள். அல்லாஹுத ஆலாவுடைய கட்டளைகளிலும், தீனுடைய விஷயங்களிலும் பெரும் முயற்சி செய்தவர்களாய் இருந்தார்கள். ஆனல், இவைகளுக்கு பங்கமேற்பட்டால் அவர்களுக்குத் கடுங்கோப மேற்படுவது வழக்கம். இக்கோபமேற்பட்ட காலத்தில்

அதை தணிக்க எவராலுமியலாது. (இது நாயனால் ஏற்பட்ட கோபமாகும். மாந்தர்களால் ஏற்பட்டதல்ல.) ஏதாவது சந்தர்ப்பங்களில் சாடைக் காட்டும்பொழுது, உள்ளங்கை பூராவைக் கொண்டும் சைக்கினைச் செய்வார்கள். கோபமான சமயங்களில் முகத்தைத் திருப்பிக் கொள்ளுவார்கள். சந்தோஷமான நேரங்களில் உதட்டின் நுனியை அமுக்கிக் கொள்ளுவார்கள். பெருஞ் சிறிப்பின் மின்னல் ஒருவேளை யுலகத்தை யெரித்துவிடுமோ என்ற பயத்தினால், குஞ் சிறிப்பின் ஜ்வலிப்பை வெளியாக்குவார்கள். ஸையிதுல் ஆலமீன் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தங்கள் வீட்டுக்குள் புகுவதாயிருப்பின், (வீட்டாரின்) வீட்டிலுள்ளோரின் உத்திரவைப் பெற்றே உட்புகுதுவார்கள்.

பிரதி தினமும் இரவுபகலை மூன்று பாகஞ்செய்து, ஒருபாகத்தை தங்களுடைய குடும்ப சம்பந்தமான வேலைகட்கும், மற்றொருபாகத்தை தங்களுடைய சொந்த வேலைகளுக்கும், இன்னொரு பாகத்தை அல்லாஹுத ஆலாவின் வணக்கத்திற்கும் செலவு செய்து வந்தார்கள். மேலும், தங்களுடைய சொந்த வேலைக்காக குறிப்பிட்டிருந்த நேரத்தையும், இஸ்லாமிய கித்மத்—ஊழியத்துக்காக ஒதுக்கிவிட்டார்கள். ரஸூல் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் உலக வாழ்க்கையின் பொருட்டுள்ள உணவுப்பொருள், உண்ணாப்பொருள் இவைகளெதையும் சேகரித்து, காப்பாற்றிவைப்பதில்லை. இதே விதம் பணங்காசுகளையும் சேர்த்துவைப்பதில்லை. தங்களை நாடி வருபவர்களை வெறுங்கையாக அனுப்புவதில்லை. சுருங்கச் சொல்லுமிடத்து தங்களுடைய துணியைக்கூட கொடுத்து விடுவார்கள். ஏழைகளுடைய கடனைத் தாங்கள் கொடுப்பதாய் பொறுப்பேற்றுக் கொள்ளுவார்கள். அனாதை குழந்தைகளின் முறைப்பாட்டைக் கேட்டு, திடுக்கமுற்று விடுவார்கள். அநியாயம் செய்யப்பட்டவர்கள் விஷயத்தில் உதவி புரிவார்கள். எவ்வேளையிலும் வயறு நிரம்ப சாப்பிடுவதில்லை. தானியவகையின் உணவையும், மற்ற உணவுகளையும் தொடர்பிடியாய் இரண்டு நேரங்களில் சாப்பிடுவதில்லை. பிறருக்குக் கொடுப்பதில் மிகவும் சந்தோஷப்படுவார்கள். பிறருக்கீயாமையில் அதிக வெறுப்புறுவார்கள். ஜனத்தலைவருக்கு மரியாதை செய்வார்கள். ஏழைகளைத் தங்கள் சமீபத்தில் உட்காரவைப்பார்கள். நோயாளிகளையும், பலயீனர்களையும் விசாரிப்பார்கள். புறம் பேசுவதை மிக வெறுப்பார்கள். மேலும், அவ்விஷயமாக ஜனங்களுக்கு அச்சமூட்டுவார்கள். சத்தியம், உண்மை ஆகியவைகளில் ஜனங்களுக்கு நேர் வழியைக் காட்டுவார்கள்.

திரு நபியவர்கள் உட்காரும் போழ்தும், எழுந்திருக்கும் போழ்தும் அல்லாஹுத ஆலாவின் திருநாமத்தை மொழிவார்கள். அவ்வமயம் எவற்றையும் பிடிக்கமாட்டார்கள். ஏதாவது நன்கொடையை சபையோர்க்கு பங்கிடும்பொழுது யாவருக்கும் சமமாய் கொடுப்பார்கள். ஹதியாக்கள் வந்து விடுமாயின், எல்லோருமாய் சேர்ந்து சாப்பிடுவார்கள். சபையோர்கள் என்ன யோசனை சொல்வார்களோ, அதில் தாங்களும் சேர்ந்து கொள்ளுவார்கள். மேலும், அச்சபையோர் செய்யும் வேலையைத் தாங்களும் செய்வார்கள். நபியவர்களுக்கு ஸஹாபாக்கள் எத்துணை தொண்டு புரிகின்றனரோ, அவைகளுக்கு அதிகமாகவே அன்னவர்களுக்கு பிரதி தொண்டு புரிவார்கள். எச்சபையிலும், எவ்விடத்திலும் தங்களுக்காக ஓர் இடத்தை பிரத்தியேகமானதாக செய்துக்கொள்ள மாட்டார்கள். சபையினர் யாவரும் தெரிந்து கொள்ளுமாறு, உயரிய மேடைகளில் அமருவதில்லை. சாதாரண ஓர் மனிதரைப் போல் சபையில் வீற்றிருப்பார்கள். தங்களுடைய ஸஹாபாக்களிடம் பேசுங்காலையில், மெல்லிய குரலுடன் இனிய தொனியோடு பேசுவார்கள். கடிந்து பேசுவதை விட்டும் விலகிக்கொள்ளும்படி உபதேசம் புரிவார்கள். ஸஹாபாக்கள் ரஸூல் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் சபையில் மிகவும் மரியாதை யொழுக்கமுடன் உட்காருவார்கள். பக்ஷிகள் வந்து நாயகம் அவர்கள் பரிசுத்த சிரசில் கால் வைத்து உட்காரினும், தான் மனிதரின் சிரசில் உட்கார்ந்திருக்கிறோம் என பக்ஷி தெரிந்து கொள்ளும் அளவு இவர்கள் ஆடாமலும், அசையாமலும் அமர்ந்திருப்பர்.

நமது நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் பெருந்தன்மை, பெரும்போக்கு ஆகியவைகளையுடையவர்களாய் இருந்தமையால், நபியவர்களை யேழைகளும், அடிமைகளும் விருந்துக்கழைப்பார்கள். நாயகம் அவர்கள் அன்னோர்களின் விருந்தழைப்பை யேற்று, அவ்வெளியோர்களின் தாழ்ந்த நிலைமையிலுள்ள இல்லங்களுக்கு, மிகப்பிரியத்தோடு சமுகங்கொடுப்பார்கள். ஒட்டகை, குதிரை, கழுதை, கோவேறு கழுதை ஆகியவைகளில் ஏறி சவாரி செய்வார்கள். வியாதியஸ்தர்களை உபசரிப்பார்கள். ஜனாஸாக்களுடன் செல்லுவார்கள். சில சமயங்களில் மண்தரையிலும் படுத்திருப்பார்கள். தங்களுடைய பரிசுத்த கரத்தினால் ஆட்டின் பாலை கரந்து, ஸஹாபாக்களுக்கு அருந்தக் கொடுப்பார்கள். தங்களைச் சந்திக்கக் கூடியவர்களுக்கு தாங்களே முன்னதாக ஸலாம் சொல்லுவார்கள். ஸஹாபாக்களில் யாருக்காவது, ஏதாவதொரு வேலையைச்

செய்யும்படி ஆக்ஞாபிப்பார்களாகில், அவர்கள் மறந்து அவ்வேலையைச் செய்யாவிடில், அவர்களைக் கோபிக்கமாட்டார்கள், என்றாலும், அவ் வேலையை தாங்களாகவே செய்து முடித்துவிடுவது வழக்கம். தங்க ளின் ஆடைகளைத் தாங்களாகவே ஜலத்தில் கசக்கி, அழுக்கைப் போக்கிக் கொள்ளுவார்கள். கிழிந்துபோன பிடவைகளை அவர்களே தைத்துக் கொள்ளுவார்கள். தங்கள் கால் ஜோடை தாங்களே சீர் படுத்திக் கொள்ளுவார்கள். கடிந்து பேசுவோர்களிடம் மெதுவாய்ப் பேசுவார்கள். கெடுதிப் பேசுவோர்க்கு நன்மைகளை ஞாபக மூட்டு வார்கள். தொந்திரவுச் செய்பவர்கள், சுகமடையும்படி செய்வார்கள். யுத்தகளத்தில் தாங்களே யாவரினும் முதன்மையாக அடியெடுத்து வைப்பார்கள். மேலும், எல்லோரைப் பார்க்கினும் முன் செல்லக் கூடியவர்களாயும் இருந்தார்கள். (வரும்.)

தாரீகுல் குர்ஆன் ஷரீபு.

(ஜனாப் குலாம் தஸ்தகீர் சாஹிபு எழுதியது.)

(256-வது பக்கத் தொடர்ச்சி.)

குர்ஆன் ஷரீபின் பாதுகாப்பு.

உலகத்தைச் சிருஷ்டித்து, ஆட்சிபுரிகின்ற எல்லாம்வல்லம் பரி சுத்த அல்லாஹுதஆலா தனது குர்ஆனெ ஹகீமில் "மெய்யாக நாம் அதை (குர்ஆன் ஷரீபை) இறக்கிவைத்தோம்; இன்னும் மெய் யாக நாம் அதைக் காப்பாற்றுவோம்" என பகிரங்கமாய் திருவுள மாகி, அக்குர்ஆன் ஷரீபை பாதுகாக்கும் பொறுப்பைத் தானே ஏற்றுக் கொண்டிருக்கிறான்.

ஹஜ்ரத் அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் இருந்து வந்த குர்ஆன் ஷரீபு, அவர்களின் மரணத்துக்குப் பிறகு, ஹஜ்ரத் உமர்கத்தாபுரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் இருந்து வந்தது. அவர்கள் மரணமடைந்தபோழ்து, அவர்களின் ஸ்தானத் திற்கு எவரையும் நியமிக்கப்படாமல் இருந்ததால், ஹஜ்ரத் உமர் அவர் களின் எழுதப்படிக்க கற்றறிந்தபுத்திரி ஹஜ்ரத் உம்முல் மூமினீன் ஹப்ஸா ரலியல்லாஹு அன்ஹா அவர்களிடம் அக்குர்ஆன் ஷரீபு தீர்மானமாக வைக்கப்பட்டிருந்தது. ஹஜ்ரத் உதுமான் ரலியல்

லாஹு அன்ஹு அவர்கள் கலீபாவாக தெரிந்தெடுக்கப்பட்டதன் பின்பு, அவர்களிடம் அக்குர்ஆன் ஷரீபு அளிக்கப்பட்டது. அவர்களுடைய கிலாபத்து காலத்தில் குர்ஆன் ஷரீபின் கிராஅத் (ஓதுவ)தில் பற்பல வேற்றுமைகள் உண்டாயின. ஆகையால், ஹஜ்ரத் உதுமான் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஸஹாபாக்களின் சரியான கிராஅத்தின்படி, அதிவிசேஷ முயற்சியோடு மூலப்பிரதிப் பிரகாரம் எழுதச்செய்து, தப்பானவைகளை யழித்து விட்டார்கள். இன்னம், அவ்வமயம் எழுத்துகளிலும், அவைகளின் உச்சரிப்பிலும் சில வேற்றுமைகளிருந்தன. பெரும் முயற்சியுடன் அக்குறைகளை நிவர்த்தித்து, குர்ஆன் ஷரீபை பரிசுத்தமாக்கினார்கள்.

ஹஜ்ரத் இப்னு ஹஜர் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் அவ்வேற்றுமையின் ஓர் உதாரணத்தை யெழுதியிருப்பதாவது:—“தாபூத்” என்ற சொல்லை ஹஜ்ரத் ஜைத்பின் ஸாபித் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் “தாபூஹ்” என்று சொன்னார்கள். ஆகவே, அநேக ஸஹாபாக்களைக்கொண்டு ஆலோசித்த பின்பு, ஹஜ்ரத் உதுமான் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் குரைஷிகள் “தாபூத்” என்று மொழிவதால், அஃதே சரியானது என தீர்மானித்தார்கள். குர்ஆன் ஷரீபு குரைஷிகளின் மொழியில் இறங்கியிருப்பதால், பின் காலத்தில் யாதாவதொரு சொல்லில் வேற்றுமையேற்படில், அச்சொல்லை குரைஷிகள் எவ்வாறு மொழிகின்றனரோ, அவ்விதமே எழுதவேண்டுமென்று காதிப்—எழுத்துக்காரர்களுக்கு எச்சரிக்கையும் செய்தார்கள். ஹஜ்ரத் அவர்களின் இவ்வூழியம் அதிஉத்தமமும், உம்மத்துகளின் மீது பெரும் உபகாரமுமாகும்.

ஹஜ்ரத் உதுமான் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், மேலே வரையப்பட்டபடி திருத்தியமைக்கப்பட்ட குர்ஆன் ஷரீபுபடி சில பிரதிகளை யெழுதச்செய்து, அவைகளை மக்கா, மிஸர், ஷாம், கூபா, பஸரா, எமன். முதலிய தேசங்களின் உலமாக்களுக்கு அனுப்பி, அத்திருத்தப்பட்ட குர்ஆன் ஷரீபுபடி வேறு குர்ஆன்கள் எழுதப்படவேண்டும் ; இன்னம் அதன் கிராஅத்தின்படியே ஓதவேண்டும் என விளம்பரஞ்செய்தார்கள். அவைகளில் ஓர் பிரதி மதீனாவில் தங்கள் வசம் வைத்திருந்தார்கள். அப்பிரதிக்கு “இமாம்” என நாமமாகும். ஹஜ்ரத் அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் கிலாபத்து காலத்தில் எழுதப்பட்ட மூலக்குர்ஆன் ஷரீபு ஹிஜ்ரீ 46-வது வருடத்தில் மர்வான் கரத்திலிருந்து யாதோ ஒரு பிரயாணத்தில் தவறிவிட்டது. ஆனால், ஹஜ்ரத் உதுமான் ரலில்லாஹு அன்ஹு அவர்களால் எழுதப்பட்ட குர்ஆன் ஷரீபுகளை இன்றுவரையில் மக்கா,

மதீனு, திம்ஷக் ஆகிய பட்டணங்களில் இருக்கின்றன. மதீனுவிலிருக்கும் குர்ஆன் ஷரீபின் பின்புறத்தில் "இது ஹஜ்ரத் உதுமான் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் உத்திரவுபடி எழுதப்பட்ட குர்ஆன் ஷரீபாகும்" என வரையப்பட்டிருக்கிறது.

ஹஜ்ரத் உதுமான் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வசமிருந்த "இமாம்" என்ற பெயருடைய குர்ஆன் ஷரீபை அவர்கள் அதிகமாய் ஓதிவந்தார்கள். அவர்கள் வெட்டுபட்டு ஷஹீதாய் போனதும், அக்குர்ஆன் ஷரீபு பிதுராஜிதப்படி பனீ உமையாக்களிடம் இருந்தது. இன்னம், அவர்களுடைய கிலாபத்து மாற்றமடைந்ததன் பேரில், திம்ஷக்கிலிருந்து, உந்தலிஸுக்குக் கொண்டு போகப்பட்டு, கிர்தபாவின் ஜாமிஅ மஸ்ஜிதில் அக்குர்ஆன் ஷரீபை வைக்கப்பட்டது. இஸ்லாமிய இராஜாங்கம் க்ஷீணதசையடைந்ததும், முராக்கோவின் "பாஸ்" என்னும் இராஜதானி பட்டணத்திற்கு அக்குர்ஆன் ஷரீபை மாற்றப்பட்டது. இப்னு பதூதா தன் யாத்திரை சரித்திரத்தில் "மேற்கூறிய இமாம் என்ற பெயருடைய குர்ஆன் ஷரீபு பஸராவின் ஜாமிஅ மஸ்ஜிதில் இருக்கிறதென்றும், அதில் மூன்றுவது கலீபா ஹஜ்ரத் உதுமான் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் இரத்தக்கறையின் அடையாளம் இருக்கிறதென்றும்" எழுதியிருக்கிறுர். ஆனுல், ருஷயாவின் பூர்வ இராஜதானி பட்டணமாகிய மாஸ்கோவில், கி. பி. 1904-வது வருடம் முஸ்லிம்கள் ஓர் புத்தகசாலை ஏற்படுத்தினுர்கள். அப்புத்தகசாலைக்கு புகாரா தேசத்திலிருந்து கொண்டுவரப்பட்ட கிதாபுகளில், இமாம் என்ற குர்ஆன் ஷரீபும் வந்திருப்பதாயும், அதில் ஹஜ்ரத் உதுமான் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் இரக்தக் கறை யிருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது.

குர்ஆன் ஷரீபின் வியாக்கியானம்.

கலீபா அப்துல் மலிக் அவர்களே முதன் முதல் குர்ஆன் ஷரீபுக்கு வியாக்கியானம் செய்யும்படி உத்திரவு செய்தார். அதன்படி ஸயீத் பின் கபீர் குர்ஆன் ஷரீபுக்கு வியாக்கியானம்—தப்ஸீர் எழுதினுர்கள். அதன்பின் தப்ஸீர்களின் தாய் என சொல்லக் கூடிய அதிகியாதிபெற்ற தப்ஸீரை இமாம் இப்னு ஜரீர்திப்ரீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் எழுதினுர்கள். அதன் பின்பு, இஸ்லாமிய உலமாக்கள் அநேக தப்ஸீர்கள் வரைந்தனர். அவைகளில் சிலது 200, 300 பாகங்களுடையதாகவு மிருக்கின்றன. தப்ஸீர் ஹதாயிக் 500 பாகங்களில் எழுதப்பட்டிருக்கிறது.

குர்ஆன் ஷரீபின் மொழிபெயர்ப்பு.

முதலில் குர்ஆன் ஷரீபை பார்ஸீ பாஷையில் மொழிபெயர்க்கப் பட்டது. உந்தலிஸ் உலமாக்கள் அம்மொழி பெயர்ப்பை கடுமை யாய் எதிர்த்தனர். இன்னம், அரபியல்லாத பாஷைகளில் குர்ஆன் ஷரீபைக் கற்பிப்பது ஜாயிஸ (ஆகும)ல்ல என தீர்மானித்து, அம் மொழி பெயர்ப்பை அழித்துவிட்டனர். ஆனால், பின்பு இஸ்லாமிய உலமாக்கள் குர்ஆன் ஷரீபு அரபியல்லாத பாஷைகளில் மொழி பெயர்க்கப்படாமல் இருப்பதன் நிமித்தியம், ஏற்படும் கஷ்ட நஷ்டங் களை யுத்தேசித்து மொழிபெயர்க்க அனுமதி கொடுத்தனர். அதன் பின்னரே பார்ஸீ, துருக்கி, ஆகிய பாஷைகளில் மொழி பெயர்ப்பு ஆரம்பமாயின. ஆயினும், இந்தியாவின் உலமாக்கள் பூர்வ அபிப்பிராயத்தையே கொண்டிருந்தனர்.

தெஹ்லியிலுள்ள மௌலானா ஷாஹ் வலியுல்லாஹ் சாஹிபு முஹத்திது ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் பார்ஸீ பாஷையில் குர்ஆன் ஷரீபை மொழிபெயர்த்தார்கள். அதை மௌலவிமார்கள் கடுமையாக எதிர்த்தனர். இன்னம், பதஹ்பூர் ஜாமிஅ மஸ்ஜிதில் மௌலானா அவர்களைக் கொலைச் செய்வதற்கும் முற்பட்டு விட்டனர். இப்பொழுது இந்தியாவில் பார்ஸீ, உர்தூ, குஜ்ராத்தி, தமிழ் ஆகிய பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. ஐரோப்பாவில் குர்ஆன் ஷரீபு ஆங்கிலம், பிரான்ஸி, ஜர்மனி, ரூஸி, இதாலி முத லிய பாஷைகளில் தர்ஜுமா—மொழிபெயர்ப்பு செய்யப்பட்டிருக் கின்றன.

குர்ஆன் ஒப்புக்கொள்ளப்பட்ட வேதம்.

குர்ஆன் ஷரீபு ஒப்புக்கொள்ளப்பட்ட வேத மென்பதற்கு கீழ் வரையப்படுகிற விஷயங்களினால் நன்கு புலனாகிறது. அஃதாவது:— ஒவ்வொரு தேசத்திலும், ஒவ்வொரு பகுதியிலும் எண்ணிறந்த குர்ஆன் ஷரீபுகள் இருக்கின்றன. அதன் ஆயத்துகள் பொன், வெள்ளி, யானைத்தந்தம் ஆகியவைகளில் எழுதப்படுகிறது. விசேஷ காலங்களில் அதற்குத் தகுதியுடைய ஆயத்துகளைப் பொன், வெள்ளி தாள்களில் வெட்டி, பட்டுப்பிடவையில் ஒட்டப்படுகிறது. இன்னும், மஸ்ஜித்களின் மிஹ்ராபுகளிலும், புத்தகசாலைகளிலும் அதன் ஆயத் துகளைப் பல அருமையான (சிகின்ஜா) சித்திர யெழுத்துகளில் எழு தப்படுகிறது.

அப்பரிசுத்த குர்ஆன் ஷரீபை குலாபாயெ ராஷிதீன்களும், மற்றும் முஸ்லிம் மன்னர்களும் தங்கள் கரத்தினால் எழுதியிருக்கிறார்

கள். அவைகளில் சில பிரதிகளுக்கு லக்ஷக்கணக்கான அஷ்ரபிகள் செலவு செய்யப்பட்டிருக்கிறது. அவைகள் புத்தகசாலைகளில் வைக்கப்பட்டிருக்கின்றன. *சுருங்கச் செல்லுமிடத்து, ஒப்புக்கொள்ளப்பட்ட எவ்வஸ்தும் அடையாத அபிவிர்த்தியின் முடிவை நம் பரிசுத்த குர்ஆன் ஷரீபு அடைந்திருக்கிறது.

ஓ எனதன்புள்ள முஸ்லிம் நேசர்காள்.! அப்பரிசுத்த குர்ஆன் ஷரீபைக்காப்பாற்றுவதும், அதைப் பிரசாரஞ் செய்யவேண்டிய பொறுப்பும் நம்மீது உண்டாயிருக்க, நாம் அப்பரிசுத்த தொண்டை செய்யாமல் பராமுகமாய் இருக்கிறோம். அதை நாம் உள்ளா உள்ளபடி நன்கறியாதபடியால், நம் அகீதா—மூலக்கொள்கையில் வேற்றுமை யுண்டாகிவிட்டது. அதனால், கோணுனற்ற ஆற்றுக்கிடைக் கொப்பாக நாம் கூட்டங் கூட்டமாய் பிரிந்துபோய் விட்டோம். அதனாலேயே பூமியின்கண் பலபாகங்களில் நாம் குப்பார்களால் தாழ்த்தப்பட்டிருக்கிறோம். பகைவர்களின் அதிகொடூரமான உத்திரவுகளின் வேதனையில் விழுந்துகிடக்கிறோம். ஆதலின், நம்மோர்களை உலகின் சமூகங்கள் இழியப்பார்வையைக் கொண்டுப் பார்க்கின்றனர். நம்மோர்கள் அடைந்த கேவலத்தில் விசனமே! நூறாயிர விசனமே!!

சுத்தி இயக்கமும், அதன் அந்தரங்கமும்.

இந்தியாவில் ஹிந்து முஸ்லிம்களுக்கு மனக்கொதிப்பை யுண்டு பண்ணக்கூடிய பஞ்சாப் கலவரம், கிலாபத்து அநீதம் போன்றவைகள் நிகழ்ந்ததினால், பிரிடிஷ் அரசாங்கத்தின்வாக்குறுதிகளில் ஹிந்து முஸ்லிம்களுக்கு நம்பிக்கையற்று போயின. ஆகவே, காந்திஜீ அவர்கள் இந்தியாவின் எல்லா ஹிந்து முஸ்லிம்களும் ஒன்றுபட்டு, ஒரே சமூகமாக மாறுவதற்கும், ஒற்றுமையாமைக்கும் அஸ்திவாரமிட்ட போழ்து, இரண்டு கெடுதிகள் வெளியாகின. அவ்விரண்டும் அதி கொடுமையாக வெளியான போது, அத்துடன் மூன்றுவதாக ஓர் கெடுதியும் சேர்ந்து கொண்டது.

(1) பிரிடிஷ் அசாங்கம் இந்திய ஒற்றுமையாமையின் சக்தியையும், பொது ஜனங்களுடைய அபிப்பிராயத்தின் பலத்தையும்

*ஆலங்கீர் பாதுஷா அவர்களின் கையால் எழுதிய குர்ஆன் ஷரீபு, இன்றும் பம்பாய் விக்டோரியா மிமோரியல் ஹாலில் இருக்கிறது.

தெரிந்து கொண்டதும், இந்திய சக்ரவர்த்தியின் ஆட்சியைக் காப்பாற்றும் கவலை அதற்கேற்பட்டது. ஆகவே, அவ்வொற்றுமையாமையைத் தனிப்பதற்காக கூடுமான யெல்லா முயற்சியையும் எடுத்துக்கொண்டது.

(2) அடிமைத் தனத்தை யாசிக்கும் கபடமும், குறுகிய நோக்கமுமுடைய ஹிந்துக்கள் முஸ்லிம்களை இந்தியாவின் ஓர் நேத்திரமாக நினைக்கவில்லை. அவர்கள் இஸ்லாமின் ஏகதெய்வக் கொள்கையையும், அதன் உலகஞ்சூழ்ந்த சகோதரத்துவத்தையும் கண்டு மனம் புழுங்கினர். மாளவியா ஜீ போன்ற......................ஹிந்துக்கள் ஈரான் ஆப்கான் ஆகிய தேசங்களினால் ஹிந்துக்களுக்கு கெடுதியேற்படும் என்று தப்பபிப்பிராயம் கொண்டனர். ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையையும் சுயராஜியம், கிலாபத்து ஆகிய இயக்கத்தையும் சின்னபின்னப்படுத்த நாடினார்கள்.

(3) எச்சமுக ஒற்றுமையிலும், கிளர்ச்சிகளிலும் சம்பந்தப்படாமல், "தலைவர்" என்ற பட்டத்தையும்,கண்யத்தையும் கோரிய ஹிந்துக்கள் பொறுமைக் கொண்டனர். அவர்கள் ஜயமேற்படும் பக்கத்தில் சேர்ந்துக் கொள்ளுவார்கள்.

முதலாவது:—மேற்கூறிய முத்தரப்பட்டவர்களே சுத்தி இயக்கத்தின் பிரசாரத்தை வெளியில் கொண்டுவந்தனர். அது சுயராஜிய கிளர்ச்சிக்குக் குந்தகம் விளைவித்ததுமட்டுமல்ல; இன்றைக்கு முப்பது வருடங்களுக்குமுன் இருந்த அடிமைத்தனத்தில் மீளமுடியாதவாறு, திரும்பவும் இந்தியாவை சிக்கவைத்துவிட்டது. இன்னும், வருங்காலத்திலும் அவ்வடிமைத் தனத்தைவிட்டும் நீங்குவதற்கான வழிகளையும் அடைத்து விட்டது. சமூகக் கட்டுபாட்டையுடைத்து, அவர்களுக்கிடையில் கலவரத்தை மூட்டுவதே அச்சுத்தி இயக்கத்தின் முதன்மை நோக்கமாகும். பலவந்தமான அரசாங்கத்தின் அபிப்பிராயமும் இதுவாகவே இருந்தது. Divide & Rule டிவைடும், ரூலும் பூர்வ பூச்சாகவிருந்தது. தேசிய கிளர்ச்சி இந்தியா பூராவிலும் எல்லா சமூகத்தினர்களுக்குள்ளும் கூட்டுயெண்ணம், ஓர் பொதுப்படையான நாட்டம் ஆகியவைகளின் முடிவான தோற்றத்தை யுண்டாக்கி, (British Imperialism) பிரிட்டிஷ் எம்பையர் லேஸமுக்கு மாற்றமான ஓர் ஒற்றுமைக்கு அஸ்திவார மிட்டுவிட்டது.

அசைக்கமுடியாத சக்தி, அழிவுறாத நாட்டம் ஆகியவைகளின் விதையை விரைத்த அவ்வொற்றுமையாமையைக் குலைப்பதற்கு ஓர் வழிதான் இருந்தது. அதாவது:—ஹிந்து முஸ்லிம்களுக்கிடையில் உட்கலவரங்களையுண்டாக்கி,இருசமுகத்தின்ஒற்றுமையைக் குலைத்து

விடுவது. மேலும், இந்தியாவின் பூர்வ ஜீவனும்சத்துக்கு நேர் பாடாக அவைகளுக்கு ஏற்றவசதிகள் இந்தியாவுக்குள் அநேகமுண்டு. அவர்கள் இந்திய அரசாங்கத்தின் ஒவ்வொருநடத்தையையும் ஆமோதிப்பதற்கு ஒவ்வொரு நிமிடமும் இடுப்புக்கட்டியவர்களாய் தயாராக விருந்தனர். அஃதாவது:— ராஜாங்கக் கூலியாகவும், அதிகார இலாக்காவைப் பூசிப்பவர்களாகவும், இராஜாங்கத்திற்கு திருப்தியாய் நடந்துக்கொள்ளவேண்டுமென்ற எண்ணத்தை தேசம், சமூகத்திற்கிடையில் உண்டாக்குகிறவர்களாகவும், கியாதியை ஆசிப்பவர்களாகவும், சரீர போகத்தையும், பெயர் பிரபல்யத்தையும் தேடுகிறவர்களாகவும் இருந்தனர். தியாகத்தை அர்த்த மற்றதாக எண்ணிக்கொண்டு, புலியின் கையிலிருந்து வேட்டையாடப் பட்டதை வாங்குவதற்கு நாடும் விப்ரல் கட்சிக்காரர்களும் இருந்தனர். அவர்களும் அரசாங்கத்தைக் கொண்டாடுகிறவர்களாகவும் இருந்தார்கள். அவர்கள் இந்யாவின் புதியதும், இளம் வயதையுமுடைய கிளர்ச்சியின் தலைமேல் வாளேயுயர்த்தி நின்றனர். இறுதியாக மேல் நாட்டு சூனியம் இந்தியாவின்பேரில் மிகைத்து விட்டது. ஒரே ஓர் ஊதலில் சுவாமி சிரத்தயானந்தரும், அவரின் சிஷ்யர்களுமாக வெளிக்கிளம்பி, முஸ்லிம்களுக்கு விரோதமாய் யுத்தத்தை அறிவித்தனர்.

இரண்டாவது:—காஜீ முஸ்தபாகமால் பாஷா அவர்கள் வெற்றி, ஆப்கன், மிஸர் இவ்விரு தேசத்தின் சுயேச்சை, ருஷியாவின் கிளர்ச்சி, மத்திய ஆசியாவின் ஜனசமூக ஒற்றுமை ஆகியவைகளினுலும், ஹிந்துவைப் பூசிக்கும் மளவியா போன்ற .... ஹிந்துக்கள் "பைன் இல்லாமிய (உலகம் சூழ்ந்த இஸ்லாமிய சகோதரத்துவ) த்தினுலும் தப்பபிப்பிராயங் கொண்டனர். முஸ்லிம்கள் உண்மையான ஹிருதயத்தோடு வாக்குறுதிச் செய்திருந்தும், சுயராஜியம் கிடைத்ததுடன் ஆப்கானியர் இந்தியாவின்மீது குதித்து விடுவார்கள் என அவர்கள் எண்ணிக் கொண்டார்கள். ஆகையால், குறுகிய ஆலோசனை, குறுகிய ஹிருதயத்துடன் நான்கு வருடங்களாய் நூற்றுக் கணக்கான ஹிந்து முஸ்லிம்களை யழித்து, நாசமாக்கிய ஹிந்து சங்கடனுக்கு அஸ்திவாரமிட்டனர்.

மூன்றுவது:—பொறுமையும், வெளி ஆர்பாடமுமுடைய ஆரிய சமாஜ சில நபர்கள் இருந்தனர். எவ்விதத்திலும் முஸ்லிம்களின் பேரில் ராஜீயத்தில் ஆதிக்கம் பெறவேண்டுமென்ற எண்ணம் அன்னோர்களைச் சதாவாட்டிக் கொண்டிருந்தது. மேலும், ஹிந்து சமுகத்தினர் மதிக்கத்தக்க சில ஹிந்துக்களும் ஆரிய சமாஜத்தில் சேர்ந்திருந்தனர். ஆகவே, மேற்கூறிய எண்ணத்துடன் தங்கள் புதிய முறைப்

படி பிரசாரஞ்செய்ய அவர்கள் வெளிக்கிளம்பி, தங்கள் எண்ணிக்கையை அதிகப் படுத்த நாடினார்கள். ஆகையால், முஸ்லிம்களை அழித்துவிட இரண்டு வழிகளை கைக்கொண்டிருக்கின்றனர். முதலாவது தங்கள் ஜனசங்கியை அதிகப்படுத்துவது. இரண்டாவது தங்கள் அதிக ஜனசங்கியை கொண்டு, இராஜாங்கத்தில் அதிகப் பிரதிநிதித்துவத்தையடைந்து, முஸ்லிம்களைத் தாழ்த்துவதாகும். இவ்வெண்ணங்களே லிப்ரல் லீக், ஹிந்து மஹாசபை ஆகியவைகளின் எண்ணமாகும். சுயராஜியத்தில் ஹிந்துக்களுக்கு கெடுதியிருக்கிறதாக அவர்களில் ராஜீய ஞானமுள்ளவர்கள் பொதுவாய் நினைக்கின்றனர். அவர்கள் ஹோம்ரூல் அல்லது பிரிடிஷ் ஆட்சிக்குட்பட்ட சுயேச்சையைத் தேடுகின்றனர். அதாவது:—பிர்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு உட்பட்டு, தேசத்தின் உட்காரியங்களில் மட்டும் சுயேச்சையை ஆசிக்கின்றார்கள்.

ஹிந்துக்கள் நாடும் மேற்கூறிய சுயாட்சியில் மெய்யாகவே முஸ்லிம்களுக்கு அநந்தம் கெடுதிகள் இருக்கின்றன. அதாவது:—பிரிடிஷ் பாதுகாப்பில் எல்லைப்புற ஆப்கானியர்களின் எதிர்ப்பை விட்டும் காக்கப்படுகிறதும், பிரிடிஷ் சைனியம் அவர்களையும் காப்பாற்றிக் கொள்ளுவார்கள். வெளிப் பாதுகாப்பு இவ்விதமிருக்க, உள் பாதுகாப்போ எல்லா விதத்திலும் ஹிந்துக்களின் கைவசத்திலேயே சிக்கிவிடும். ஏனெனின், அவர்கள் ஜனசங்கியில் அதிக மிருக்கின்றனர். கல்வியும், செல்வாக்கும் அவர்களிடம் அதிகமுண்டும். ஆகவே, அன்னோர்கள் ஹிந்து சங்கத்தன், ஆரிய சமாஜ பிரசாரம் ஆகியவைகளினால், சில வருடங்களுக்குள் தங்களின் 20 இருபது கோடி சங்கியை 28-இருபத்தெட்டு கோடியாகச் செய்துக் கொள்ளுவார்கள். எவ்விதமெனில்:—ராஜ புத்திரர்களையும், புதிய முஸ்லிம்களையும் தங்கள் சமுகத்தில் சேர்த்து 28 கோடியாக அபிவிர்த்திச் செய்துக் கொள்ளுவார்கள். அதன்பின்பு 2 அல்லது 3 கோடி முஸ்லிம்களிருப்பார்கள். அவர்களைத் தாழ்த்திவிடுவது அவர்களுக்கு ஓர் கஷ்டமன்று. இராஜாங்க உத்தியோகம் ஹிந்துக்களிடத்தில்; சைனியம், போலீஸ் ஹிந்துக்களிடத்தில்; அஸம்பிளி, சட்டசபை ஹிந்துக்களின் பிரதிநிதிகளால் நிறம்பிவிடுவது போன்றவைகள் ஏற்படும். அவைகளில் தப்பித்தவரி எங்கே எங்கேயாவது ஒன்று, இரண்டு முஸ்லிம்கள் காணப்படின் ஹிந்துக்களுக்கு அது ஓர் பிரமாதமன்று. சன்ன சன்னமாக அரைநூற்றாண்டுக்குள் (மிலேச்ச) முஸ்லிம்களைவிட்டும் இந்தியாவை சுத்தப்படுத்தி விடுவார்கள். ஆகையினால், மேற்கூறிய இத்தியாதி காரணங்களினாலேயே மாளவியாவின் சங்கடன், லிப்ரல்

லீக்கின் ஹோம்ரூல், (லிப்ரல் கட்சியில் ஓர் முஸ்லிமும் இல்லை.) ஹிந்து மஹா சபாவின் ஒற்றுமை, ஆரியர்களின் சுத்தி இயக்கம் முதலியவைகள் இந்தியாவில் பகிரங்கமாய் வெளிக்கிளம்புகின்றன.

(1) இப்போழ்து இந்தியாவின் ஏழைகளாகவும், பிறரிடம் எதிர்ப்பார்ப்பவர்களாகவும், சொற்பத்தொகையினராகவும், முட்டாள்களாகவும், சுரணையற்றவர்களாகவும் இருக்கும் முஸ்லிம்கள் "நாம் எத்துணைக் கெடுதிகளுக்கு ஆளாகியிருக்கின்றோம்" என்பதையோசித்துப் பார்க்கட்டும்.

(2) பிர்டிஷ் எம்பைர்லேஸம் உலகம் பூராவிலும் பரவியிருக்கிறது. அதுவே இஸ்லாமிய ராஜீயத்தை புத்திசாதுரியமாக சன்னபின்னப் படுத்தும் விரோதியாகும். இந்திய ஹிந்துக்களோடு சேர்ந்து இஸ்லாமிய கட்டுப்பாட்டையே குலைத்துவிடுவது அதற்கு ஓர் கஷ்டமன்று. அதன்பின்பு இஸ்லாமிய உலகம் எவ்விதமாகவிடும்? அல்லாஹுதஆலா காப்பாற்றுவானாக! 1,48,10,000 ஒரு கோடியே நாற்பத்தெட்டு லக்ஷத்து பதினாயிரம் யூதர்கள் இன்று உலகில் ஜீவித்திருப்பதுபோல், முஸ்லிம்களும் இருக்கும்படியாய் நேரிடும்.

(3) லிப்ரல் கட்சியின் ஹோம்ரூல்காரர்கள் பிர்டிஷ் ஆட்சிக்குட்பட்டு, எல்லாவித அதிகாரத்தையும் கைப்பற்றி, இந்தியாவின் உள் ராஜரீகத்தின்பேரில் மிகைத்து விடுவார்கள். இன்னமும் முஸ்லிம்களை ஏழைகளாகவும், பிறரிடம் ஆதரவுவைப்பவர்களாகவும் செய்து, தங்கள் ஆட்சிக்குட்படுத்திவிடுவார்கள்.

(4) ஹிந்து சங்கத்தன் பலதரப்பட்ட ஹிந்துசமூகங்களைச் சீர்திருத்தி, ஒன்றுசேர்த்து முஸ்லிம்களுக் கெதிரிடையாய் யுத்தாவேசமுடைய சமூகமாக்கி, முஸ்லிம்களின் ஜீவிப்பையே கெடுத்துவிடுவார்கள். பின்பு பசுக்குர் பானீயையும், அதான் சொல்வதையும், கூட்டமாகத் தொழுவதையும், ஈதில் கூடுவதையும் தடுத்து, புத்த மதத்தினர்களை நிர்பந்தஞ்சய்து இந்தியாவிலிருந்து வெளிதேசத்துக்கு துரத்தியதுபோல், முஸ்லிம்களையும் இந்தியாவைவிட்டும் வெளிப்புறப்பட நிர்பந்தஞ் செய்வார்கள்.

(5) சுத்தி இயக்கத்தார் புதிய முஸ்லிம்களையும், கீழ்ச்சாதியினர்களையும் தங்களோடு சேர்த்து, தங்கள் சங்கியை அதிகப்படுத்திக் கொள்ளுவார்கள். இன்னும், முஸ்லிம்களின் எண்ணிக்கையைக் குறைவுபடுத்தி, அதிகாரத்தின் எல்லா ஸ்தானங்களையும் கைப்பற்றிக்கொள்ளுவார்கள்.

இறுதியாக நாம் நம் தேச சகோதரர்களாகிய ஹிந்துக்களிடம் சகோதரத்வத்துடன் விண்ணப்பித்துக் கொள்ளுவதாவது:—எம்

தேச ஹிந்து சகோதரர்களே! இஸ்லாம் மார்க்கம் கடவுளால் நீடித்துக்கொண்டிருக்கிறது. ஆகவே, நீங்கள் மேற்கூறிய துர்யெண்ணங்களையுங்களின் ஹிருதயத்திலிருந்து களைந்துவிடுங்கள். இஸ்லாமைக் கெடுக்க நாடியக் கூட்டத்தினர் என்ன நிலைமையை அடைந்திருக்கின்றார்கள் என்பதையும், இஸ்லாம் எப்படிப்பட்ட மார்க்கமென்பதையும் உலகசரித்திரங்களில் ஆராய்ச்சி செய்துபாருங்கள். எம் தேச சகோதரர்களே! நுங்கள் சங்கடன், ஹிந்து மஹாசபை, சுத்தி இயக்கம் ஆகியவைகள் நீர்மேல் குமிழிளாகிவிடும். இஸ்லாம் மார்க்கத்தை இந்தியாவிலிருந்து அழித்துவிடமுடியாது. அது அழிக்கப் படமாட்டாதென்பதையும் நீங்கள் சாந்தமாக யோசித்துப் பாருங்கள். அவைகள் உங்களுக்கு நன்கு புலனுகும்.

இங்ஙனம், ஹமீத் ஹஸன்.

ரங்கீலா ரஸூல்.

சென்னை முஸ்லிம்களின் பெரும் மகாநாடு.

30,000 பேர்களுக்கதிகமாகக் கூடினர்.

சென்னை முஸ்லிம்களின் ஏராளமான ஊர்வலங்கள்.

நகரெங்கும் கடைகள் மூடப்பட்டன.

முஸ்லிம்களின் மதஉணர்ச்சியின் காட்சி.

முக்கியமான பிரசங்கங்களும், தீர்மானங்களும்.

ராஜ்பால் என்பவர் பிரசுரஞ்செய்த "ரங்கீலா ரசூல்" என்னும் புத்தகத்தின் பிரசுரத்தினுலும், அவ்வழக்கு சம்பந்தமாக ஜஸ்டிஸ் டேலிப்ஸிங்கு கொடுத்த தீர்மானத்தினுலும் இந்திய முஸ்லிம்கள் எல்லோரும் மனம் புண்பட்டு கொதிப்படைந்து இருக்கிறுர்கள். ஆங்காங்கு கண்டனக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன. சென்னை முஸ்லிம்களின்பிரமாண்டமான பெருத்த கூட்டமொன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை (17-7-27) மாலை 5 மணிக்கு சென்னை திருவல்லிக்கேணி திலகர் கட்டத்தில் நடைபெற்றது. சுமார் 35,000

பேர்களுக்கதிகமாகவே கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். நேற்று முழுவதும் சென்னையில் முஸ்லிம்களின் கடைகளெல்லாம் மூடப்பட்டன. முஸ்லிம்களெல்லோரும் தங்கள் தங்கள் வேலைகளை நிறுத்தி யிருந்தார்கள். நேற்றைய கூட்டத்திற்கு முஸ்லிம்கள் எல்லோரும் வரவேண்டு மென்றும், கடைகளை மூடவேண்டு மென்றும் சென்ற பத்து தினங்களாக, தலைவர்கள் ஆங்காங்கு பற்பல டிவிஷன்களில் கூட்டங்கள் கூட்டி, போதனை செய்து வந்தார்கள். நேற்று மூன்று மணிக்கே அந்தந்த டிவிஷன்களிலிருந்து முஸ்லிம்களின் ஊர்வலங்கள் கொடிகளுடனும் "அல்லாஹு அக்பர்" என்னும் முழக்கத்துடனும் திருவல்லிக்கேணி வாலாஜா மஸ்ஜிதை நோக்கிப் புறப்பட்டன. மாலை 4-மணிக்கு சென்னை மௌண்ட்ரோடு கவர்ன்மெண்டு ஹவுஸ் பாலத்திலிருந்து பெரிய மஜ்ஜித்வரைக்கும் முஸ்லிம்களின் கூட்டம் எள்ளு போடவும் இடமில்லாமலிருந்தது. டிராம் வண்டிகள் ஆங்காங்கு சில நிமிஷங்கள் கூட்டத்தின் காரணமாக நிறுத்தப்படவேண்டியிருந்தது. ஊர்வலங்களெல்லாம் திருவல்லிக்கேணி மஸ்ஜிதில் கூடி அஸர் தொழுகையை முடித்து, பெருத்த ஊர்வலமாக திருவல்லிக்கேணி ஹைரோடு, பைகிராப்ட்ஸ்ரோடு சாலைவழியாக கடற்கரைக்குச் சேர்ந்தன. வழிநெடுக நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் புகழ்ந்து பாக்கள் (மௌலூது) படித்துக் கொண்டே பலர் சென்றனர். நபிகள் நாயகமவர்களைப் புகழ்ந்து பாக்கள் பல அச்சிடப்பட்டு பற்பலரால் ஜனங்களுக்கு பட்வாடாவும் செய்யப்பட்டது. இடையிடையே "அல்லாஹு அக்பர்" என்னும் முழக்கம் வானத்தைப் பிளக்கும் படியாக இருந்தது. இத்தகைய பெரும் ஊர்வலமும், கூட்டமும் இதற்குமுன் சென்னையில் நடந்தது கிடையாது. சென்னையில் கிலாபத் இயக்க காலத்தில் கூட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. ஆனால் இத்தகைய கூட்டம் நடந்தது கிடையாது. இஸ்லாம் மத ஸ்தாபகரான நபிகள் நாயகமவர்கள்மீது முஸ்லிம்களுக்குள்ள பற்றையும், அன்பையும் காட்டுவதற்கு நேற்றைய கூட்டம் போதிய சான்றாகும். கடற்கரையில் முஸ்லிம்களுடைய தேத்தண்ணீர் கடைகளும், ஷர்பத்துகடைகளும், பட்சணக் கடைகளும் பல இருந்தன. நேற்றையகூட்டம் சென்னை மாகாண முஸ்லிம்லீகின் ஆதரவில் கூட்டப்பட்டது. (சென்னை நகரில் இரண்டு முஸ்லிம் லீகுகள் இருக்கின்றன. இரண்டும் மாகாண லீகுகள் என்றே பெயர் வைத்துக் கொண்டிருக்கின்றன. ஒரு லீக்கிற்கு இந்தியா சட்டசபை மெம்பர் மௌலவி சையத் முர்துஜா சாஹிப் பிரசிடெண்டு. மற்றொரு லீகிற்கு இராஜாங்க சபை மெம்பர் கனம் மஹ்மூத் பாஷாசாஹிப் பிரசிடெண்டு. நேற்றைய கூட்டம் கனம் மஹ்மூத் பாஷா பிரசிடெண்டாக இருக்கும் லீகின் ஆதரவில் கூட்டப்பட்டது.)

அக்கிராசனர் பிரசங்கம்.

கனம் மஹ்மூத் பாஷா அக்கிராசனராகத்தெரிந்தெடுக்கப்பட்டபின், மலையாளத்தைச் சேர்ந்த முஹம்மத் பின் அப்துல்லா மௌல்வி சாஹிப் அவர்களின் கிராஅத்துக்குப்பின் கூட்டத்தின் நடவடிக்கைகள் ஆரம்பமாயின. அக்கிராசனர் கனம் மஹ்மூத் பாஷா அவர்கள் செய்த பிரசங்கத்தின் முக்கியபாகம் பின்வருமாறு:—

சகோதரர்களே! நாமெல்லோரும் இங்கு எதற்காக கூடியிருக்கிறோம் என்பதை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள். தற்சமயம் நமக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடியான நிலைமையின் சங்கடத்தை கவர்மெண்டாருக்குத் தெரிவிக்கவே நாம் இங்கு கூடியிருக்கிறோம்.

ஜஸ்டிஸ் டேலிப்சிங்கு செய்த தீர்ப்பு சட்டப்படி நீதியானதாக இருக்கலாம். ஆனால் அவருடைய தீர்ப்பின் காரணமாக முஸ்லிம்களின் மத உணர்ச்சி புண்பட்டு கொதிப்படைந்து விட்டது. நபிகள் நாயகமவர்களைப்பற்றி அவதூறாகவும், கேவலமாகவும் கூறும் ஒருவனைத் தண்டிக்க தற்காலம் அமுலில் இருக்கும் கிரிமினல் சட்டம் இடங் கொடுக்கவில்லை யென்பது ருசுவாகி விட்டது. தற்காலம் சட்டம் இருக்கும் கேவல நிலைமையைக் கண்டனஞ் செய்யவும், நபிகள் நாயகமவர்களைத் தாக்கிய விஷயங்களைக் கண்டனஞ் செய்யவுமே இந்திய முஸ்லிம்களின் கூட்டங்கள் நாடுமுழுவதும் நடைபெற்று வருகின்றன.

ஜஸ்டிஸ் டேலிப்சிங்கு அவர்கள் தாம் செய்யும் தீர்ப்பின் பலன் என்னவாகுமென்று சற்றேனும் ஆலோசனை செய்யாதது மிகவும் வருந்தத் தக்கதாகும். நபிகள் நாயகமவர்கள் ராஜ்பால்போன்ற விஷமிகளால் தாக்கப்பட்டு, இழிவுபடுத்தப்படுவதை முஸ்லிம்கள் ஒருக்ஷண நேரமும் சகித்துக்கொண்டிருக்க மாட்டார்கள். முஸ்லிம்கள் நபிகள் நாயகமவர்களை தங்கள் உயிரினும் மேலானவராகவும், அல்லாஹுத ஆலாவுக்கு அடுத்தபடியாக மதித்து வருகிறார்கள். தங்கள் உடல், பொருள், ஆவி மூன்றையும் மட்டுமல்ல, தங்கள் மனைவிமக்கள் பெற்றோர் எல்லோரையும் நாயகமவர்களின் கண்ணியத்தையும், பெருமையையும் காக்க தியாகஞ் செய்ய முஸ்லிம்கள் தயாராக இருக்கிறார்கள்.

உலகிலுள்ள 40-கோடி முஸ்லிம்களும் நபிகள் நாயகமவர்களை தங்கள் தலைவராகக் கொண்டிருக்கிறார்கள். இத்தகைய பெருமையான நிலைமையில், மதிக்கப்பட்டுவரும் ஒருவரை இழிவு படுத்திக் கூறுவது, அப்பெரியாரைப் பின்பற்றும் 40-கோடி முஸ்லிம்களையும் அவமதித்து இழிவு படுத்தியதாகும். எல்லாவற்றிலும் மிகவும் விந்தையானது என்னவென்றால், இத்தகைய பெரியாரை ஒருவர் இழிவு படுத்திக் கூறினால், அத்தகைய விஷமியை தண்டிக்க சட்டமில்லை என்று கூறுவதுதான். இத்தகைய விஷமிகளைத் தண்டிக்க சட்டம் இடங் கொடுக்க வில்லையானால், சட்டத்தைத் திருத்தி மாறுதல் செய்யவேண்டியது அவசியமாகும். அரசர் பெருமானின் குடிகளுடைய மார்க்க உணர்ச்சி புண்படும் படியாகக் கூறுபவர்களை தண்டிக்க இடம் வைத்தே கிரிமினல் சட்டம் தயார் செய்யப்பட்டிருக்கிறது. அப்படியிருக்க, ராஜ்பால் போன்ற விஷமிகளைத் தண்டிக்க இடமில்லையென்று கூறுவது ஆச்சர்யமாக இருக்கின்றது. ஒருவரைப்பற்றி துவேஷமாக ஒரு வார்த்தை கூறுபவர்களைத் தண்டிக்க சட்டமிருக்க, ஒரு மார்க்கத் தலைவரை துவேஷித்து, அவரைப் பின் பற்றுவோர் மனது புண்படும் படியாக எழுதியவரை தண்டிக்க சட்ட மில்லையெனக் கூறுவது விந்தையிலும் விந்தையாக இருக்கிறது. இத்தகைய விஷமிகளைத் தண்டிக்க இப்பொழுதுள்ள சட்டத்தில் இடமில்லையாயின், இப்பொழுதுள்ள சட்டத்தை உடனே திருத்த வேண்டும். அல்லது புது

சட்டமொன்றை உடனே ஏற்படுத்த வேண்டும். நாட்டில் அமைதியும், சமாதானமும், நிலவவேண்டி முஸ்லிம்களின் மனக்கொதிப்பை அடக்குவதற்கான முயற்சியை செய்து வைக்கும்படியாக நான் கவர்ன்மெண்டாரைக் கேட்டுக் கொள்ளுகிறேன். எனது முஸ்லிம் சகோதரர்களிடம் நான் தாழ்மையாக விண்ணப்பித்துக்கொள்ளும் விஷயம் ஒன்றுஇருக்கின்றது. இதுவரைஅமைதியாகவும், சமாதானமாகவும் முஸ்லிம்கள் நடந்து கொண்ட விதமாகவே இன்னும் நடந்து கொள்ளும் படியாக நான் வேண்டிக்கொள்ளுகிறேன். ஹிந்து சகோதரர்கள் இதுவரையில் ஒருவரேனும் ராஜ்பாலின் விஷமத்தனத்தைக் கண்டனம் செய்து கூறியதாக நான் படித்தது கிடையாது. ஹிந்துக்களும் முஸ்லிம் களுடன் சேர்ந்து ராஜ்பால் போன்றவரின் விஷமப் பிரசுரங்களைக் கண்டனஞ்செய்வார்களென்று நான் நம்புகின்றேன் என்று கூறிமுடித்தார்.

முதல் பிரேரணை.

ரங்கீலாரசூல் வழக்கில் ஜஸ்டிஸ் டேலிப்ஸிங்கு செய்ததீர்ப்பையும், அவர் 153 ஏ பிரிவிற்கு செய்த வியாக்கியானத்தையும் கண்டு சென்னை முஸ்லிம் களின் இக்கூட்டம் மனக்கொதிப்புடன் கண்டனஞ் செய்கின்றது.

இப்பிரேரணையை இந்தியா சட்டசபை மெம்பரும் "ஆஸாதேஹிந்து" பத்திரிகையின் ஆசிரியருமாகிய மௌலானா அப்துல் லதீப் பாரூகி பிரேரணை செய்து, ரங்கீலா ரசூல் வழக்கின் விபரத்தை எடுத்துக் கூறி, முஸ்லிம்கள் அடக்கத்துடன் நடந்து கொள்ளவேண்டிய அவசியத்தை வற்புறுத்திக்கூறினர்.

வேலூர் பாக்கியாத்துஸ்ஸாலிஹாத் அரபிக்கலா சாலையின் நாஜிரும், சென்னை பிரபல வியாபாரியுமான கான் பகதூர் மௌலானா மௌலவி அல் ஹாஜ்ஜியாவுத்தீன் முஹம்மத் சாஹிப் பிரேரணையை ஆமோதித்துப் பேசுகை யில் அல்லாஹுதஆலாவின் மீதும், அவனுடைய ரசூலாகிய நபிகள் நாயகம் ரசூலேகரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள்மீதும் அன்புவைப்பவர்களே உண்மை முஸ்லிம்களாவார்களென்றும், முஸ்லிம்கள் தங்கள் நாயகத்தின் மீது வைத்திருக்கும்அன்பிற்கும் பற்றிற்கும் எதையும் ஈடாகச் சொல்ல முடியாதென்றும், நபிகள் நாயகம் இழிவுபடுத்தப் படுவதை ஒருநிமிஷத்திற்காக வேனும்முஸ்லிம்கள் சகியார்களென்றும் சொன்னர்.

இரண்டாவது பிரேரணை.

"முஸ்லிம் அவுட்லுக் பத்திரிகையின் ஆசிரியரையும்" பிரசுராதாரையும், லாகூரில் 144-வது பிரிவை மீறியதற்காகக் கைது செய்யப் பட்டிருக்கும் தொண்டர்களையும், உலமாக்களையும் உடனே விடுதலை செய்ய ஏற்பாடுகள் செய்யும்படியாக, சென்னை முஸ்லிம்களின் இக்கூட்டம் இந்தியா கவர்ன்மெண்டைக் கேட்டுக்கொள்ளுகின்றது."

இப்பிரேரணையை கான் பகதூர் மௌலானா தஜம்முல் ஹுசைன்கான் சாஹிப் பகதூர் ஈமான் (ஆர்க்காட்டு இளவரசரின் மாமனர்) பிரேரணை சய்தார்.

வாலாஜா மஸ்ஜிதின் நாயபேமுதவல்லி சுல்தானுல் வாயிஜீன் மௌலானா மௌலவி முகையத்தீன்பாஷா சாஹிப் இதை ஆமோதித்தார்.

மூன்றாவது பிரேரணை.

" நாட்டின் முஸ்லிம்களின் மனக்கொதிப்பை அடக்குவதற்கான சகல ஏற்பாடுகளையும் உடனே செய்யும்படியாக இக்கூட்டம் இந்தியா கவர்ன்மெண்டைக் கேட்டுக்கொள்ளுகின்றது. இவ்வாறு துவேஷமாகக் கூறுபவர்களைத் தண்டிக்க இப்போதுள்ள 153 எ. பிரிவு இடங்கொடுக்கவில்லையென இந்தியா கவர்ன்மெண்டார் அபிப்பிராயப்படும் பட்சத்தில், உடனே அப்பிரிவை திருத்தும் படியாகவும், இவ்வாறு சட்டம் திருத்தப்படும் வரையிலும், அல்லது ஜஸ்டிஸ் டேலிப் சிங்கின் தீர்ப்பு தவறானதென்று பிரவி கௌன்சிலின் தீர்ப்பு பெறும் வரையிலும் துவேஷமாக கூறும் ராஜ்பால் போன்றவர்களைத் தண்டிக்க அவசரச் சட்ட மொன்றையேனும் தம் விசேஷ அதிகாரத்தின் கீழ் அமுலுக்குக் கொண்டு வரும்படியாக இக்கூட்டம் இந்தியா கவர்ன் மெண்டைக் கேட்டுக் கொள்ளுகின்றது.

இப்பிரேரபணையை மௌலானா மௌலவி கலீலுர்ரஹ்மான் சாஹிபு பிரேரபிக்க, ஜனாப் எல். எம். குலாம் அஹமத் ஆமோதித்தார்.

நான்காவது பிரேரணை

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை இந்தியா கவர்ன்மெண்டாருக்கு அனுப்ப அக்கிராசனருக்கு அனுமதித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அக்கிராசனருக்கும் ஊர்வலம் கொண்டு வந்தவர்களுக்கும் கடை மூடிய வியாபாரிகளுக்கும் வந்தன மளிக்கப்பட்டு கூட்டம் கலைந்தது.

மற்றொரு கூட்டம்

ஜனங்கள் ஏராளமாக இருந்ததால் மற்றொருமேடை போடப்பட்டு அதில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அதற்கு மௌலானா அபுல்ஹுதா சாஹிப் அக்கிராசனம் வகித்தார். ஜனாப் எல். எம். குலாம்அஹ்மத், மலையாள மௌலவி முஹம்மத் பின் அப்துல்லா முதலானோர் பேசினார்கள். தீர்மானங்கள் ஒன்றும் நிறை வேற்றப் படாமல் கூட்டத்தின் நோக்கத்தையும் முஸ்லிம்களின் கடமையையும் விளக்கிக் கூறினார்கள். அதன் விபரம் பின்வருமாறு:—

மௌலானா அபுல்ஹுதா

சாகிப் பேசியதன் முக்கிய பாகம் பின்வருமாறு:—

சகோதரர்களே! இன்று நாம் இவ்வளவு ஆவலுடன் சகல தொழில்களையும் விட்டு இவ்விடம் கூடியிருப்பதன் நோக்கமானது, 40 கோடி முஸ்லிம்களின் உயிருக்கு உயிராய் இருக்கும் நமது நாயகம் முஹம்மது முஸ்தபா ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களின் மேலான கண்ணியத்தையும், பெருமையையும் காப்பாற்றவும் அப்படி செய்வதில் அவசியமாயின் 40 கோடி மக்களும் தங்கள் உயிரையும் தியாகம் செய்ய தயாராக இருக்கிறோமென்பதை இறைவனுக்கு முன்னும், உலகத்தினருக்கு முன்னும் காட்டுவதற்கேயொழிய வேறொன்றிற்குமல்ல. நமது பகைவர்களான ஆசிரிய சமாஜி

களிலொருவரான ராஜ்பால் என்பவர் இரு உலகிற்கும் வள்ளலும் நபிகள் திலகமும், அல்லாஹ்வின் ஹபீபுமாகிய நமது நாயகம் முகம்மது முஸ்தபா நபி முர்துஸா காத்தமுல் அன்பியா ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை மிக ஆபாசமான அடாத வசை மொழிகளால் அக்கிரமமாகவே ரங்கீலா ரஸூல் எனும் புத்தக வாயிலாக இகழ்ந்துகூறி யிருப்பதை 153 ஏ. ஐ. பி. சி. பாடிகேஸ் எடுக்க கீழ்க் கோர்ட்டுகளில் குற்றவாளியெனத் தீர்மானித்து ராஜ்பாலை தண்டித்தபோதிலும், ஹைகோர்ட்டில் ஜஸ்டிஸ் டேலிப்சிங்கு வளவளப்பான வியாக்கியானம் கூறிவிட்டு ராஜ்பாலை விட்டதையும், அதை நியாயமுறையில் கண்டித்து ஒரு பத்திரிகையின் கடமையை செய்த "முஸ்லிம் அவுட்லுக்" பத்திரிகை ஆசிரியரையும், அதன் பிரசுரதாரரையும் தண்டித்ததையும் கண்டிக்கவும், இதன் மூலம் நமக்குள்ள மத உணர்ச்சியையும், மனக்கொதிப்பையும் வெளியிடும்பொருட்டே இக்கூட்டம் கூட்டப்பட்டது.

ஜனுப் எல். எம். குலாம் அஹமத்

சகோதரர்காள்! ரங்கீலா ரஸூல் என்னும் பதத்திற்கு பொருள் வேஷக்கார ரஸூல் என்பதேயாம். 40-கோடி முஸ்லிம்கள் தங்கள் உடல் பொருள் ஆவியிலும் மேலாக கருதி அவசியம் ஏற்பட்ட காலத்து எதையும் தியாகம் செய்யத்தயாராக இருக்கும் நபிகள் திலகம் ரசூலே கரீம் (ஸல்) அவர்களையே வேஷக்கார ரஸூலெனப் பெயர் கொடுத்து ராஜ்பால் என்பவர் ஒருநூல் எழுதியிருக்கிறார். அந்நூலின் வாயிலாக நமது நாயகம் ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களை நாவினுல் சொல்லவும், காதினுல் கேட்கவும், மனதினுல் எண்ணவும்கூட முடியாத அவ்வளவு அக்கிரம அநியாய அபவாத வசை மொழிகளைக் கூறியிருக்கிறார். கவர்ன்மெண்டார் அப்புத்தகத்தைப் பறிமுதல் செய்து அவன்மீது வழக்கு தொடர்ந்தனர். கீழ் கோர்ட்டு, செஷன்ஸ் கோர்ட்டுகளில் குற்றவாளி யெனக் தண்டனை கொடுக்கப்பட்டும், ஹைகோர்ட்டில் ஜஸ்டிஸ் டேலிப்சிங்கு அவரை குற்றவாளி யல்லவென மிகவினோதமும் வேடிக்கையுமான வியாக்கியானத்தை 153. ஏ. பிரிவுக்குச் செய்து, ராஜ்பாலை விடுதலை செய்துவிட்டார்.

இங்ஙனம் செய்த தீர்ப்பை முஸ்லிம் அவுட்லுக்பத்திராதிபர் அப்பத்திரிகை வாயிலாக கண்டித்துக் கூறினர். ஹைகோர்ட்டு ஜஸ்டிஸ் டேலிப்சிங்கின் தீர்ப்பானது இதுகாறும் செய்யப்படாத புது வியாக்கியானமாகும். இதே சட்டப்படி பண்டிட்காளி சாண்தரஸை அலஹாபாத் ஹைகோர்டு ஜட்ஜி தலால் விசித்திர ஜீவன் எனநூல் இயற்றினதற்காக தண்டித்திருக்கின்றார். ஆனல் இவ்விதம் டேலிப்சிங்கு தீர்ப்பளிக்க ஏதோ காரணம் இருக்கலாம். ஆகையால் ஒரு கமிஷனை நியமனம் செய்து இவ்விஷயத்தை விசாரிக்கும்படி கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்வதுமல்லாமல், டேலிப்சிங்குமீது ஜனங்களுக்கு நம்பிக்கைகுறைந்து விட்டதால் அவர் ராஜிநாமா செய்ய வேண்டுமென்றும் முஸ்லிம் அவுட்லுக் பத்திரிகை வாயிலாக அதன் ஆசிரியர் வெளியிட்டார். இப்படி எழுதியது கோர்ட்டை அவமதித்ததென கூறி அப்பத்திரிகையின் ஆசிரியரான ஜனுப்

திலாவர்ஷா பொகாரியையும். பிரசுராதாரர் ஜனுப் நூருல்ஹக்கு சாஹிபை யும் முறையே 6-மாதகாவலும் 750 ரூபாய் அபராதமும், 3-மாதக்காவலும் 1000 ரூபாய் அபராதமும் பஞ்சாப் ஹைகோர்ட்டாரால் விதிக்கப்பட்டது.

ஒரே சட்டத்தின் ஒரே பிரிவுக்கு இரு ஹைகோர்ட்டுகளின் இரு ஜட்ஜுகள் வெவ்வேறு விதமாக வியாக்கியானம் செய்திருக்கையிலும், இந்த 153 A-பிரிவிற்கு இதுவரை இவ்வித விசித்திரமான வியாக்கினம் ஒருவரும் செய்த தில்லாததாலும், நபிகள் நாயகம் அவர்களை இழிவுபடுத்திக் கூறிய ஒருவரை தண்டிக்க சட்டமில்லாமற் போயிற்றே யென்று மனக்கொதிப்படைந்து முஸ்லிம்களின் ஆவேசமும், ஆத்திரமும் அளவு கடந்து நின்றகாலே, அவர்களை சாந்தப்படுத்தி அமைதிக் குட்படுத்த வேண்டி ஆசிரியர் அவ்வாறு எழுதியிருந்தார். ஆனுல்அவர் நோக்கத்தைக் கருதாமல் பஞ்சாப் ஹைகோர்ட்டாரவர்கள் கோர்ட்டை அவமதித்த குற்றத்திற்கு முஸ்லிம் அவுட்லுக் ஆசிரியரையும், பிரசுராதாரரையும் தண்டித்தார்கள். அவர் செய்தது குற்றமாயினும் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டனதாகையால், அவ்வளவு கடுந்தண்டனை விதித்திருக்கக் கூடாது.

ஜஸ்டிஸ் டேலிப்சிங்கு ஹிந்துவானதால் முஸ்லிம்கள் எல்லோரும் கண்டிப்பதாக ஹிந்துக்கள் சிலர் கூறுகின்றனர். ஜஸ்டிஸ் டேலிப் சிங்கு ஹிந்து வல்ல. அவர் கிறிஸ்தவர் என்பதை நாம் நன்கு அறிவோம். முஸ்லிம் ஜட்ஜு இத்தகைய தீர்ப்பு செய்திருந்தாலும் அவரையும் கண்டித்திருப்போம். என்று கூறினுர்.

அதன்பிறகு மலபார் மௌலவி முஹம்மத் பின் அப்துல்லா, ஜனுப்கள் முஹம்மத் இஸ்மாயீல், அப்துல் ஜலீல் சாஹிப், அப்துல் காதிர் சாஹிப், மௌல்விகாஜி அப்துல் ஜலீல் ஷரீப் சாஹிப், விஷாரம் அப்துர்ரஹீம் சாஹிப் முதலானேர் பேசினுர்கள்

இரு மேடைகளிலும் அக்கிராசனர் முடிவுரைகளுக்குப்பின் துஆ ஓதப் பட்டதன் பின்னர் கூட்டங்கள் கலைந்தன. (ஷை. இ.)

நங்கையர் முழக்கம்.

பெண்களின் கடமைகள்.

(274-வது பக்கத்தொடர்ச்சி)

சகோதரிகளே! நீங்கள் உங்களின் யோசனையைக் கொண்டு கொஞ்ச நேரம் ஓர்ந்து ஆராய்ந்து பாருங்கள். உங்களின் கவனயீனத்தினுலும், மறதியினுலும் நீங்கள் அநேக கடமைகளையும், அபிவிர்த்திகளையும் இழந்துவிட்டீர்கள். இன்னமும் இழந்து கொண்டிருக்கிறீர்கள். ஆனுல், உங்களின் நிலைமையைச் சீர்படுத்திக் கொள்

ளுவீர்களாயின், ஸிராதில் முஸ்தகீம் என்னும் நேர்வழியை யடையக்கூடும். நீங்கள் உங்களின் கடமை எத்தன்மை வாய்ந்தது? இன்னம், அக்கடமைகளில் இறைவன் எப்படிப்பட்ட அவசியத்தைப் பொதிந்து வைத்திருக்கின்றான்? என்பதை கொஞ்சநேரம் குளிர்ந்த ஹிருதயத்தோடு நோட்டமிடுங்கள். எக்கருமம் அதிமுக்கியமான தாகவிருக்கிறதோ, அஃதேபோல் அதை ஒழுங்குபெற முடித்துவைப் பதிலும் அதிகவனம் கொண்டிருக்கவேண்டும். ஆனால், நம் சகோதரிகள் அக்கடமையைக் கொஞ்சமும் கண்ணியப் படுத்தவில்லை. தங்கள் தோளின்பேரில் எக்கடமையை சுமையாக்கப் பட்டிருக்கிறது? அவை எத்தன்மை வாய்ந்தது? அச்சுமையைத் தங்கள் தோளிலிருந்து எவ்விதம் இறக்கிவைக்கிறது? என்பனவற்றை சற்றும் கவனியாது வாளாவிருந்து விட்டது மிகவருந்தத்தக்க காரியமாகும். நாம் இறுதியாக நம் உண்மை எஜமானனை தரிசிக்க வேண்டுமே! நாம் நம்முடைய கடமையை சரிவர நடத்திவைக்கா விட்டால், அவனை எம்முகத்தைக் கொண்டு தரிசிக்கிறது? அல்லாஹுத ஆலா நம்பேரில் கடமையாக்கிய காரியங்களைப்பற்றி விசாரிப்பதற்கு சுதந்தரமுடையவனாகும். ஆகவே, அவன் நம்மை நோக்கி "நான் உங்கள்பேரில் சில முக்கிய கடமைகளை யேற்படுத்தியிருந்தேனே! அவைகளை நீங்கள் கவனிக்காமல், அலக்ஷிய புத்தியோடு ஏன் எறிந்து விட்டீர்கள்? மற்றோர்களை யேன் நோக்கினீர்கள்? யான் ஏற்படுத்திய காரியங்களைச் செய்ய நுங்களுக்கு ஏன் பிரியமில்லை?" என கேட்டால், அதற்கு என்ன விடையளிப்பது என்பதை எம் தாய்மார்கள் கொஞ்சமும் நோட்டமிடுவதில்லை..

மாதர்களின் இக்கேவல நிலைமைக்கு ஆடவர்களும் பொறுப்பாளியாவார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஏனெனின், பெண்களின் கெடுதலுக்கு முதன்மையாக ஆடவர்களே காரணஸ்தர்கள். இன்னம், அவர்களே ஓடிக்கொண்டிருக்கும் வண்டியின் ஓர் சக்கரத்தை கழட்டி விட்டார்கள். அவர்கள் மாதர்களின் மீது சட்டத்துக்கு விரோதமான ஆதிக்கத்தைக் கைகொண்டனர். பெருத்த அநியாயம் செய்தனர். பெண்கள்மீது சாட்டிய கட்டுபாடுகளும் இயற்கைச் சட்டத்துக்கு விரோத மானவைகளே. பொதுவாய் அவர்களின் உரிமைகளைக் கவனிக்கவில்லை. ஆனால், சாதாரணமாய் மிருகத்திலும் கேவலமாய் எண்ணினர். ஆகவே, மாதர்கள் இக் கொடுமைகளில் சிக்குண்டு, வாழ்க்கை நடத்துவதால், அவர்களின் இஸ்லாமிய உயர்ப் பதவியான மனோதைரியம் பின்னடைந்துவிட்டது. பரிசுத்த இஸ்லாம் மார்க்கத்தின்

பூர்வ மேன்மையும், சிறப்பும் மண்ணில் புதைக்கப்பட்டது. அவர்களுடைய நரம்புகளில் சென்று, கொதித்துக்கொண்டிருந்த இஸ்லாமிய இரத்தம் குளிர்ந்துவிட்டது. ஹிருதயம் பிணமாகிவிட்டது. சட்ட விரோதமான கட்டுப் பாட்டிற்கு உட்பட்டிருப்பதால், அவர்களுடைய நடவடிக்கைகள் கெட்டுப்போயின. அவர்களின் நடவடிக்கைகளில் இஸ்லாமிய பிரகாசமே நீங்கிவிட்டது. ஆகவே, இப்படிப்பட்ட மாதர்களின் வயற்றில் ஜனிக்கும் பிள்ளைகள் பரிசுத்த இஸ்லாமுக்கு கண்ய முடையவர்களாய் ஆகுவார்களென்றும், அதன் மேன்மையை காப்பாற்றுவார்களென்றும் நினைப்பதற்கு முடியவில்லை. இவ்விதமே சிலகாலம் சென்றபின்பு காலத்தின் போக்கு முற்றும் மாறுதலடைந்தது. பெண்கள் தங்களின் நிலைமையை நோக்கிய போழ்து அவர்கள் எல்லா விஷயங்களிலும் பின்னணியில் இருப்பதைக் கண்டுக்கொண்டனர். ஆகவே, அவர்கள் அபிவிர்த்தியடைய வேண்டுமென்ற எண்ணம் அவர்களின் மனதைக் கைப்பற்றியது.

அவ்வெண்ணத்தோடு யெழுந்து நின்றனர். தற்காலம் உலகில் உண்டாயிருக்கும் அபிவிர்த்தி, சுயேச்சை ஆகியவைகளின் கூக்குரல் அப்பெண்களை "நாம் எப்படிப்பட்ட சுயேச்சையையும், அபிவிர்த்தியையும் அடையவேண்டு மென்பதை ஆலோசனை செய்து பார்க்க வசதியளிக்கவில்லை. ஆகையினாலேயே, அவர்களின் சுயேச்சை, அபிவிர்த்தி ஆகியவைகளின் கிளர்ச்சியில் இஸ்லாமிய நற்பணம் வீசவில்லை. ஏனெனின், அவர்கள் எப்படிக்கொற்ற சுயேச்சை யடைந்திருக்கின்றனரோ, அச்சுயேச்சை பெண்களுக்கு வேண்டற்பாலன்று அவர்கள் தங்கள் குழந்தைகளை கவனிப்பதில்லை. மார்க்க விரோதமான சடங்குகளினால் இஸ்லாம் மார்க்கத்தின் மகிமையைக் கெடுக்கின்றனர். குடித்தனத்தை வேலைபாட்களிடம் விட்டுவிட்டனர். அவ்வேலைபாட்கள் குடும்பத்தில் நன்றாய்க் கொள்ளைக் கொள்ளுகின்றனர். பைசா செலவாகுமிடத்தில் ரூபாய் செலவாகின்றது. ஆனால் பதார்த்தங்கள் இன்பசுவையற்றவைகளாக விருக்கின்றன. அதன்பொருட்டு புருடர்கள் ஆத்திரமடைகின்றனர். யுத்தமேற்படுகின்றது. பெண்கள் குடும்பத்தைக் கவனிக்காது பகல் முழுதும் முழுச்சோம்பேரிகளாக பாயும், படுக்கையுமாக விருக்கின்றனர். என்று பெண்கள் தங்களின் கடமையை சரியாய் நிறைவேற்றுகின்றனரோ, அன்றே இஸ்லாம் மார்க்கத்தின் மேன்மையும், சிறப்பும் ஓங்கும். உண்மையான அபிவிர்த்தியை அடைவார்கள். தங்கள் பிள்ளைகளுக்கும், பெண்களுக்கும் நற்குணங்களைக் கற்பித்து, கல்வியைப் போதிக்க வேண்டும்; முக்கியமாய் பெண்பிள்ளைகளுக்கு அவர்களின் கடமையை

நன்கு போதித்து, அனுவசியமான சுயேச்சையை நாடுவதை விட்டும் தடுத்துவிடவேண்டும். ஆனால், ஆகுமான சுயேச்சை, அபிவிர்த்தி முதலியவைகளை யடைவதற்கு வழிகாட்டி, இஸ்லாமிய மேன்மை, சிறப்பு ஆகியவைகளை நன்றாய் கற்பிக்கவேண்டும். அவர்களுக்கு நமது நாயகம் ரஸூலே அக்ரம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவ ஸல்லம் அவர்கள் நம்பிராட்டிமார்களின் நன்னடக்கைகளையும், அவர்களின் சற்குணங்களையும் தங்கள் பெண் குழந்தைகளின் இளம் மனதில் பதியச்செய்து, அவர்களின் நரம்புகளில் பரிசுத்த இஸ்லாமிய உதிரம் ஓடிக்கொண்டிருக்கும் படியாய் செய்யவேண்டும். அன்னோர்களுக்கு நம் இஸ்லாம் மார்க்கத்தையும், அதன் போதனைகளாகிய சற்குணங்களையும் தாய்மார்கள் பாலூட்டும் காலத்திருந்து கற்றுக்கொடுப்பார்களாயின், இன்ஷா அல்லாஹு தஆலா இன்று இஸ்லாம் அடைந்திருக்கும் கேவல நிலைமை நீங்கி, உலகம் புகழும்படியான நிலைமையை யடையும்.

அல்லாஹு தஆலா நம் இஸ்லாமிய மாதர்களின் ஹிருதயத்தில், இஸ்லாமின் உண்மை அன்போடும், சகோதரத்துவத்தோடும் நடப்பதற்கும், அவர்கள்பேரில் விதியாகியிருக்கும் கடமைகளை அவர்கள் நன்கு நிறைவேற்றிவைக்கும் படியான நல் ஆற்றலையும் கொடுத்து, இஸ்லாமிய ஆரம்பகாலத்து கியாதியுடைய, புகழப்பட்ட மாதரசிகள் நடந்துகாட்டிய நற்குணத்தை பின்பற்றி நடப்பதற்கும் வல்லமையை இக்கால மாதர்களுக்குக் கொடுத்தருள் புரிவானாக ! ஆமீன்.

சிறுவர்கள் பக்கம்

பரிசுத்த இஸ்லாமிய ஹுக்கும்களின் விபரம்.

இஸ்லாம் மார்க்கம் (1) "அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹு, வஹ்தஹு லாஷரீகலஹு வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸூலுஹு" என்று மொழிந்து, அதன் பொருளையும் அறிகிறது. அதாவது :—மெய்பாக வணக்கத்திற்கு தகுதிவாய்ந்தவன் அல்லாஹு த ஆலாவைத் தவிர, வேறு எவனுமில்லை ; இன்னம் அவன் இணையற்ற ஒரே ஓர் நாயன் என்பதன் பேரில் சாட்சிப்பகருகிறேன். இன்னம், மெய்யாக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவ

ஸல்லம் அவர்கள் அந்த அல்லாஹுவின் அடிமையும், தூதருமாகும் என்பதன் பேரில் சாட்சிப்பகறுகிறேன் என மொழிந்தும், உண்மைக் கொண்டும் ஈமான்—நம்பிக்கை கொள்ளுவது, (2) ஐந்து நேரமும் தொழுகுவது, (3) ரமலான் மாதம் நோம்பு நோற்பது, (4) முதலு டையவன் ஜகாத்து கொடுப்பது, (5) சக்தியும், முதலுமுடையவன் ஹஜ்ஜு செய்வது. ஆக இவ்வைந்தும் பரலாகும்.

மஸ்அலா :—இஸ்லாம் மார்க்கத்தில் (1) உம்ரா செய்வது, (2) பெற்றோர்க்குப் பணிச்செய்தல், (3) கணவனுக்கு மனைவி பணிச்செய் தல், (4) பித்ருடைய ஸதகாக் கொடுக்கிறது, (5) குர்பானீ செய்வது, (6) வித்ரு தொழுகையைத் தொழுகுவது, (7) இனத்தாரோடு உற வாடியிருக்கிறது, (8) தாடிவைப்பது. இவ்வெட்டும் வாஜிபாகும்.

மஸ்அலா :—இஸ்லாம் மார்க்கத்தில் (1) விர்த்த சேதனம் (கத் னுச்) செய்வது, (2) தலைமுடி எடுப்பது, (3) நாசியின் ரோமம், (4) கம்கட்டு ரோமம், (5) அக்குள் ரோமம், இவைகளைக் களைவது, (6) உதட்டின் ரோமத்தை—மீசை வாயில் வந்து விழாமல் தறிப்பது, (7) நகத்தைத் தறிப்பது. இவ்வேழும் சுன்னத்துகளாகும். மேற் கூறிய மூன்றையும் "இஸ்லாமின் பர்லு" என்றும், "இஸ்லாமின் வாஜிப்" என்றும், "இஸ்லாமின் சுன்னத்து" என்றும் சொல்லப்படும்.

பரிசுத்த இஸ்லாமுடைய ஈமானின் விபரம்.

(1) லாயிலாஹ இல்லல்லாஹு, முஹம்மதுர் ரஸூலுல் லாஹி என்று நாவினுல் மொழிந்தும் (2) அதன் பொருளை அதா வது :—"வணக்கத்திற்கு தகுதி வாய்ந்தவன் அல்லாஹுத ஆலா வைத் தவிற, வேறு எவனுமில்லை; முஹம்மது ஸல்லல்லாஹு அலை ஹிவஸல்லம் அவர்கள் அல்லாஹுத ஆலாவின் திருத்தூதரானவர் கள்; அவர்கள் கூறியவையாவும் உண்மையானது" என அறிந்து,

---

முஸ்லிம்களும், குர்ஆன் ஷரீபும்.

நண்பர்களே ! இப்பக்கத்தின் மேற்பகுதியில் முக்கியமாய் நீங்கள் அறிய வேண்டிய இஸ்லாமின் விஷயங்களை வரைந்து வருவதுடன், இக்கீழ் பகுதியில் உங்களுடைய கல்வி, சீர்திருத்தம் ஆகியவைகளின் அபிவிர்த்திக்கு வேண்டிய அதி முக்கியமான விஷயங்களை யெழுதி வருவோம். இன்ஷா அல்லாஹ்.

அல்லாஹுத ஆலாவுடைய பரிசுத்த குர்ஆன் ஷரீபில் மனிதன் எம்மட்டுக்கு ஆராய்ச்சி செய்கிருனே, அவ்வளவுக்கு புதிய புதிய அரிய விஷயங்கள் அவனுக்குத் தோன்றுகிறது. குர்ஆன் ஷரீபுக்கு சமமான ஓர் கிதாபு (கிரந்தம்) உலகில் கிடையாது. ஆனல், முஸ்லிம்

நன்னம்பிக்கைக் கொள்ளுவதற்கே "ஈமான்" என்று சொல்லப்படும். மேற்கூறிய இரண்டையும் ஈமானுடைய "பர்லு" என்றும், ஈமானுடைய "ருக்குன்" என்றும் சொல்லுவார்கள்.

முதன்மையாக:—"நான் அல்லாஹுதஆலாவின் பேரிலும், அவனுடைய வர்ணிப்புகளுடன், அவன் திருநாமத்தின் பேரிலும் ஈமான் கொண்டு, அவனின் எல்லா உத்திரவுகளுக்கும் தலைச்சாய்த்தேன்" என்று முஜ்மல்படி ஈமான் கொள்ளவேண்டும். பின்பு (1) அல்லாஹுதஆலா, (2) அவனின் மலக்குகள், (3) அவனுடைய வேதங்கள், (4) அவனுடைய ரஸூல்மார்கள், (5) இறுதிநாள், (6) நன்மையும், தின்மையும் அல்லாஹுதஆலாவின் கற்பனையின்படி நேரிடுகிறது, (7) மௌத்தானதன் பின்பு உயிர்ப்பெற்று எழுந்திருப்பது இவைகளின்பேரில் முபஸ்ஸலாக ஈமான் கொள்ளவேண்டும். இவ் வேழு கருமத்திற்கே ஈமானுடைய பர்லுகள் என்று சொல்லப்படும்.

மஸ்அலா:—ஈமானுடைய ஷர்த்துகள் ஏழுண்டு. (1) கைபின் பேரில் அதாவது:—நாம் பார்க்காத அல்லாஹுதஆலாவின் தாத், ஸிபாத், சுவர்க்கம், நரகம், இறுதி நாளின் கேள்வி கணக்கு, ஸிராத் முதலியவைகளின் பேரிலும், (2) அல்லாஹுதஆலா மறைவானயெல்லா காரியங்களையும் அறிவான் என்பதன் பேரிலும், (3) புத்தி சுவாதீனமாக விருக்கும் போழ்தும், (4) ஹலாலை—ஆகுமானதை ஹலால் என்றும், (5) ஹராமை—ஆகாததை ஹராம் என்றும் ஈமான் கொண்டும், (6) அல்லாஹுதஆலாவின் தண்டனையைப் பயப்படுகிறதும், (7) அவனின் கிருபையை யெதிர்ப்பார்ப்பது மாகும்.

மஸ்அலா:—ஈமானின் ஹுக்கும்கள் ஏழு. (1) மூமினானவனை அநீதமாய் அடிப்பது, (2) மூமினானவனை சிறையில் வைப்பது, (3)

கள் தங்கள் மார்க்கத்தின் வேதமென ஒப்புக்கொண்டிருக்கும் குர்ஆனை எப்பொழுதும் ஆராய்ச்சி செய்யாதிருப்பது அதிகொடிய விசனத்தை மூட்டுகின்றது. குர்ஆனின் ஓர் ஆயத்தைக்கூட நன்கறியாத முஸ்லிம்கள் அநேகர் இருக்கின்றனர். முஸ்லிம்கள் குர்ஆன் ஷரீபை ஓதுகிறார்களென்றும், அதையவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு ஆரம்பத்தில் கற்பிக்கிறார்களென்றும் சொல்லப்படுகிறது. ஆனால், தற்காலம் அந்த அல்லாஹுதஆலாவின் வேதத்தை ஈருலகப் பாக்கியத்தை யடையும் பொருட்டும், அக்குர்ஆனை ஓதுவதனால் குழந்தைகளின் ஹிருதயத்தில் அல்லாஹ்வின் ஆக்ஞைகள் பதிந்து, நற்குணத்தை யடையும் பொருட்டும் கற்பிக்கப்படாம லிருப்பதைக்காண அதிக விசனமேற்படுகிறது. (வரும்)

மூமினுடைய சொத்தை அபகரித்துக் கொள்ளுவது, (4) மூமினை வனை தொந்தரவு செய்வது, (5) அவன் பேரில் துர்யெண்ணம் கொள்ளுவது ஆகிய இவ்வைந்து காரியங்களையும் உலகில் செய்யாது விலகிக்கொள்ள வேண்டும். அவ்விதம் நடந்தவன் மறுமையில் (6) எப்பொழுதும் நரகவேதனையை விட்டும் விடுவிக்கப்படுவான், (7) அவன் சுவர்க்கம் புகுவான் என நம்பிக்கைக் கொள்ளவேண்டும்.

மஸ்அலா:—ஒருவன் பேரில் ஈமான் கொள்ளவேண்டியது கடமையாக ஏற்படுவதற்கு இரண்டு நிபந்தனைகளுண்டு. (1) பகுத்தறியும் புத்தியை அடைகிறது, (2) வயதை யடைகிறது.

மஸ்அலா:—ஈமான் நம்மிடத்தில் நிலைத்திருப்பதுக்கு மூன்று காரியங்களுண்டு. (1) நாம் ஈமான் கொண்டு முஸ்லிமாக விருப்பதற்கு சந்தோஷப்படுகிறது. (2) நம்மைவிட்டும் ஈமான் போய்விடுவதைக்கொண்டுப் பயப்படுகிறது. (3) ஈமானைக்கெடுத்து நாசமாக்கும் சொற்செயல்களை விட்டும் விலகியிருக்கிறது. இம்மூன்றையும் கொண்டு ஈமான் நிலைத்திருக்கிறது.

சிறுவர்களே! இன்று உலகில் உங்கள் கண்முன் தோன்றும் மாந்தர்கள் யாவரும் இறந்து போவார்களே யன்றி, என்றும் இவ்வுலகில் ஜீவித்திருக்கப் போவதில்லை. ஆகவே, ஈமானில்லாமல் இறப்பவன் பேரில் ஆயிரக்கணக்கான விசனமேற்படும். ஈமானுடன் மரணித்தவன் பேரில் நூறாயிரக்கணக்கான சுபசோபனம் உண்டாகுமென்பதை நீங்கள் நன்கறிந்து, யாபகத்தில் வைத்துக் கொள்ளுவதோடு, நம்மையும் மரணத்தருவாயில் ஈமானோடு மௌத்தாக்கி வைக்கும்படியாய் நம் எல்லாம் வல்ல இறைவனிடம் துஆகேட்டுக் கொண்டிருக்கவேண்டும்.

பத்திராதிபர் குறிப்பு.

ரங்கீலா ரஸூலும், ஹைக்கோர்ட் தீர்ப்பும்.

ஜஸ்டிஸ் கன்வர் தாலீப்சிங்கின் பொறுப்பற்ற தீர்ப்பு இந்திய ராஜீயம், மதம் ஆகியவாழ்க்கையின் பாதையில் ஓர் கிளர்ச்சியையுண்டு பண்ணி விட்டது. ஆகவே, அது இந்தியா பூராவிலும் கியாமத்துடைய மஹ்ஷரையுண்டு பண்ணிற்று. சட்டத்தை மீறவிருந்த பஞ்

சாப் முஸ்லிம்கள் ஸர் மால்கம் ஹெய்லீ அவர்களின் ஆருதலான சமாதானங்களாலும், பஞ்சாப்பின் நியாய புத்தியுடையோர்களின் நற்போதனையாலும் சட்டமறுப்பை ஒத்திவைத்து, சாந்த முற்றிருக்கிறார்கள். ஆனால், ஹிருதயத்தின் கொதிப்பு கொஞ்சமும் தணிந்திருப்பதாய் தெரியவில்லை.

* * * *

பஞ்சாப் மகாணத்தின் பெரிய பட்டணம் முதற்கொண்டு, சிறிய பட்டிக்காடுவரையிலும், சங்கை வாய்ந்த நபிகள் பிரான் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் கண்யத்தைக் காப்பாற்றும் பொருட்டு, தங்கள் அருமையான உயிரையும் தத்தம் செய்யத் தயாராகிக் கொண்டிருக்கின்றனர்.

இவ்விஷயம் பஞ்சாப்போடுமட்டுமில்லை. ஒவ்வொரு மாகாணத்து முஸ்லிம்களின் நிலைமையும் அவ்விதமாகவே இருக்கிறது. கவர்ன்மெண்டார்கள் இது விஷயத்தில் தீர ஆலோசனைச்செய்து, முஸ்லிம்களின் ஹிருதயத்தில் துளிர்விட்டெரியும் நெருப்பை அணைக்க முயற்சிக்காவிட்டால், சட்ட கட்டுப்பாட்டுக்கும், சமாதானத்துக்கும் பங்கம் விளையுமோ வென அஞ்சவேண்டியதாய் இருக்கிறது. ஸர் மால்கம் ஹெய்லீ அவர்களின் அனுபோக நடவடிக்கைகள் காலத்தின்நிலைமையை நன்கறிந்து, இந்தியாவை தற்கால இக்கெடுதியை விட்டும் காப்பாற்றுவார் என நம்பிக்கை யடைகிறோம்.

* * * *

பரிசுத்த இஸ்லாம் மார்க்கத்தின் ஸ்தாபகரும், அக்காலத்து அவர்களின் விரோதிகளான அரபியர்களாலும் உண்மை மனதோடு புகழப்பெற்ற, நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் கண்யத்தை காப்பாற்றும் பொருட்டு, முஸ்லிம்களின் எண்ணத்தை யெடுத்துக் காட்டிய "முஸ்லிம் அவுட்லுக்" பத்திராதிபர், அதன் பிரசுரதார் ஆகிய இருவரையும், மற்றும் மார்க்க விஷயமாய் தங்கள் எண்ணங்களைவெளியிட்டவர்களில் 20 பேர்கள் வரை சிறையில் அடைத்திருப்பதாவது, முஸ்லிம் பொது ஜனங்களின் சாந்தத்தைக் கெடுக்கும் இறுதி நாளின்உத்திரவாக விருக்கிறது. மேற்கூறியவர்கள் விடுதலை அடையாதவரையில் முஸ்லிம்களின் ஹிருதயம் சாந்தப்படுமென தெரியவில்லை.

வர்த்தமான் சஞ்சிகையின் கேஸ்.

பஞ்சாப் கவர்ன்மெண்டார் முஸ்லிம்களின் பொது கொந்தளிப்பை நன்குணர்ந்து, வர்த்தமானின் கேஸை அம்ரத்ஸர் கோர்ட்டிலி

ருந்து பரீக்ஷார்த்தமாக லாஹூர் ஹைக்கோர்ட்டிற்கு மாற்றியிருக்கிறார்கள். ஏனெனின், முஸ்லிம்களின் கிளர்ச்சி நீடித்துக்கொண்டிருக்காமல் சாந்தப்படவும், புண்பட்ட அவர்களின் ஹிருதயத்தை சாந்தியடையச் செய்யவுமே கவர்ன்மெண்டார்கள் இதை தயாரித்திருக்கிறார்கள். இச்செய்கை மெச்சத் தகுந்ததே. ஆனால், இக்கேஸ் ஜஸ்டிஸ் கன்வர் தாலீப் சிங்கு தீர்ப்புக்கு மாற்றமாகவும், முஸ்லிம்கள் அபேட்சைக்கு நேர்பாடாகவும் தீர்ப்பளிக்கப்படினும் சரி, ரங்கிலா ரஸூல் தீர்ப்பினால் ஏற்பட்ட ஆத்திரம் தணிவதற்கில்லை. கவர்ன்மெண்டார்கள் இவ்விஷயத்தில் என்ன செய்யப் போகிறார்கள் என்பதும், இக்கேஸுகளினால் ஏற்பட்ட கிளர்ச்சியை எவ்விதம் நீக்கப்போகிறார்களென்பதும், கீழ்க் கோர்ட்டு தீர்ப்பை எடுத்துக்கொள்ளுகிறார்களா, அல்லது ஹைக்கோர்ட்டு தீர்ப்பை எடுத்துக் கொள்ளுகிறார்களா யென்பதும் இனி தெரியவரும். இவ்விதமான இருகேஸுகளில் எப்புறமாயினும், அது உண்மையை ஆதரித்ததாக ஆகமாட்டாது. இன்னும், வருங்காலத்தில் இதைப்போன்ற கெடுதிகளை யெவ்விதம் தடுக்க ஏற்பாடுகள் செய்யப் போகிறார்களென்பதையும் நாம் எதிர்பார்த்திருக்க வேண்டியதாக விருக்கிறது.

துருக்கி ராஜீயத்தின் புதிய முறைகள்.

ஒரு காலத்தில் பால்கன் நாடுகளில் உதுமானிய சாம்ராஜ்யத்து இளம்புரையின் கொடி பறந்து கொண்டிருந்தது. ஆனால், அவைகள் சிறுக சிறுக பல சமஸ்தானங்களாகப் பிரிந்து, பல சிற்றரசர்களின் கீழ்ப்பட்டு விட்டன. அவைகள் சுயேச்சையை யடையும் பொருட்டு, துருக்கியர்களோடு 17-வருடங்களுக்குமுன் யுத்தம் தொடுத்து, சுயேச்சைபெற்றன. ஆனால், மஹாயுத்தத்திற்குப் பின் துருக்கி ஜன ஆட்சியாக மாறி, தன் நிலைமையை அதிபந்தோபஸ்தாகச் செய்து கொண்டதன் பின்பு, பால்கன் நாடுகள் துருக்கியோடு ஒற்றுமைப்பட்டு, தனிப்பட்ட ஓர் நேச அரசர்கள் கூட்டமாக ஆகுவதற்கு, இத்தாலியின் நாடு பிடிக்கும் ஆசை அல்பானியா, ஈகோஸ்லாவியா போன்றோர்களை நிற்பந்தப் படுத்திவிட்டது. இதில் துருக்கியர்கள் சேர்ந்து கொள்ளும்படி அதிகமுயற்சிகள் நடக்கிறதாக சமாசாரங் கிடைக்கின்றன. இது தேசீய விஷயமானதால், இவ்விதம் ஒற்றுமைப் படுவது துருக்கியர்களுக்கு அதி நன்மைப் பயக்குமென்பதில் சந்தேகமில்லை.

உலகப் போக்கு.

டில்லி முஸ்லிம் ஸ்திரீகளின் கூட்டம். ஜூலை 12உ டில்லியிலுள்ள முஸ்லிம் ஸ்திரீகள் மிஸஸ் காஜாஹஸன் தலைமையில் ஒரு கூட்டம் கூடினார்கள். ''ரங்கீலா றஸூல்'' என்ற பிரசுரத்தை உடனே பறிமுதல் செய்வதோடு, அதன் பிரசுர கர்த்தாவையும் தண்டிக்க வேண்டுமென்றும், தங்கள் நிலைமையை உயர்த்திக்கொள்ள ஆண்பிள்ளைகளின் உதவியை எதிர் பார்க்காமலிருக்க வேண்டுமென்றும், ரங்கீலா றஸூல் தகராறு முடியும் வரையில் முஸ்லிம்கள் துக்கக் குறி ஒன்றை அணிய தலைவர்கள் ஏற்பாடு செய்யவேண்டு மென்றும், ''முஸ்லிம் அவுட்லுக்'' ஆசிரியரையும், பிரசுர கர்த்தாவையும் விடுதலைச் செய்ய வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பிரிட்டன் இப்னுஸூஊத் உடன் படிக்கை ஊர்ஜிதமானவுடன் வெளியிடப்படுமாம். லண்டன், ஜூலை 13உ காமன்ஸ் சபையில் கேள்விகளுக்குப் பதில் கூறுகையில் இப்னுஸூஊதுடன் உடன் படிக்கை செய்து கொள்ளப் பட்டுவிட்டதையும், அது ஊர்ஜிதமானவுடன் வெளியிடப்படுமென்றும் ஸர் ஆஸ்டின் சேம்பர்லேன் தெரிவித்தார்.

முஸ்லிம் சிறுவர்கள் ஈமானின் உணர்ச்சியும், போலீஸ் ஆபீஸருடைய நடத்தையும். லாஹூர், ஜூலை 7உ சட்ட மறுப்பவர்கள் கொத்துவாலி கேட்டில் வந்து கூடியபோழ்து, வெளியில் நின்று கொண்டிருந்த 7-வயது, 10-வயதுடைய சிறுவர்கள் ''அல்லாஹூ அக்பர்'' என்று கூறிக்கொண்டிருந்தனர். ஓர் ஆங்கில போலீஸ் ஆபீஸர் அச்சிறுவர்களை விலக்கிக்கொண்டிருந்தார். அவர் பஷீர் அஹ்மது ஷாஹ் என்ற சிறுவனின் கழுத்தைப் பிடித்துக் கடித்து விட்டான். பையன் ஷீம் பாம்யூ ''வெட்கம் வரவேண்டியது'' என மொழிந்தான். அதன் பேரில் மற்ற சிறுவர்களும் ஷீம், ஷீம் என கூறினர். ஆபீஸருக்கு கோபமூண்டு பையன்களைத் தொந்தரவு செய்ய ஆரம்பித்தான். அதனால், அஹ்மத் முக்தார் ஷாஹ், முஹம்மது ஸாதிக், ஹாபிஸ் முஹம்மத் அக்பர் ஆகிய மூன்று பையன்கள் கீழே படுத்துக்கொண்டு ''எங்களை வெட்டிவிடும்'' என மொழிந்தார்கள். அதன் பேரில் போலீஸ் சிப்பாய் தடிகளை யெடுத்துக்கொண்டு, பையன்களை விரட்டினார்கள். இதற்குள் சிறுவர்கள் கலைந்துபோயினர்.

ஷாமில் கஷ்டப்படும் முஸ்லிம்களின் உதவிக்கு விண்ணப்பம். மௌலானா ஷௌக்கத் அலீ அவர்களுக்கு சென்றல் ரீலீப் கமிட்டியின் அக்கிராசனர் அமீனுல் ஹூஸைனீ அவர்கள் தந்தி கொடுத்திருக்கிறார்கள்:— ''ஷாம் தேசத்தில் அநியாயத்திற்கு ஆளாகிய ஆயிரக்கணக்கான முஸ்லிம் ஆண், பெண், சிறுவர் முதலியோர் பஞ்சத்தால் தங்கள் இல்லங்களை விட்டு வெளிக்கிளம்பி யிருக்கின்றனர். அன்னோர் இந்திய முஸ்லிம் சகோதரர்களிடத்தில் உதவி தேடுகின்றனர்.'' அவர்களுக்கு உதவிசெய்ய விரும்பு

வோர் அமீனுல் ஹுஸைனி அவர்களுக்கு நேராக அனுப்பியோ, சென்றல் கிலாபத்து கமிட்டி பம்பாய்க்கு அனுப்பியோ உதவி செய்யும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

உலகம் சூழ்ந்த இஸ்லாமின் ஆச்சரியம். மிஸ்டர் பலபீ முஸ்லிமாகி விட்டார். மௌலானா ஷௌக்கத் அலீ அவர்கள் கூறியிருக்கிறார்கள்:—அரேபியாவின் புதிய சமாசாரத்தினால் மிஸ்டர் பலபீ இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவிக்கொண்டார் எனத் தெரியவருகிறது. அவர் ராஜீயத் தொண்டினால் அரேபியாவில் கியாதி பெற்றிருக்கிறார். ஆனால், அவர் உண்மை மனதோடும், நல்லெண்ணத்தோடும் இஸ்லாமாகி யிருக்கிறார் என்றாவது, அல்லது பிரிடிஷுக்கு தொண்டு புரிந்து, கியாதி யடைவதற்காக முஸ்லிமானார் என்றாவது கூற முடியவில்லை.

ஆள் தூக்கிச் சட்டம் கல்கத்தா ஜூலை 13-இன்று கல்கத்தா நகரசபைக் கூட்டமொன்று கூடியது. வங்காள ஆள் தூக்கிச் சட்டப்படி விசாரணை யில்லாத வங்க தேசாபிமானிகளை சிறையில் வைத்திருப்பதற்காக சர்க்காரை கண்டிப்பதாகவும், அவர்களை உடனே விடுதலை செய்யவோ, அல்லது கோர்ட்டு விசாரணைக்கு ஆஜர் படுத்தவோ வேண்டுமென கல்கத்தா நகரசபை வற்புறுத்துகிறதென ஒரு தீர்மானம் நிறைவேறியது. இத்தீர்மானத்திற்குச் சாதகபாதகமான ஓட்டுகள் எடுக்கப்பட்ட பொழுது, காம்பெல், தாம்சன் என்ற இரண்டு ஐரோப்பியர்கள் தவிர மற்றவரனைவரும் தீர்மானத்திற்குச் சாதகமாகவே ஓட்டுக் கொடுத்தனர்.

திம்ஷிக்கில் அரபி எகாடமீ—அரபி கல்விமான்களின் சங்கமொன்று நிறுவகிக்கப் பட்டிருக்கிறது. அச்சபையினர் அரபி பாஷையின் அபிவிர்த்தி, சீர்திருத்தம் முதலியவைகளை வெகு நன்றாய் செய்து வருகின்றனர். அச்சபையில் அநேகமாய் இராக், ஷாம், மிஸர், தூனிஸ், அல்ஜஸாயிர், அரப் முதலிய தேசத்து உலமாக்களும், ஐரோப்பிய கல்விமான்களும் அதில் சேர்ந்திருக்கிறார்கள். இந்தியாவின் 7-கோடி முஸ்லிம்களில் அரபி கல்வியில் பாண்டித்திய முள்ளோர் அநேகரிருந்தும், ஒருவராவது அதில் சேராதிருப்பது விசனத்தை யுண்டாக்குகிறது. அச்சபையினர் இக்குறையை யுணர்ந்து ஹகீம் அஜ்மல்கான் சாஹிப் அவர்களை பிரத்தியேகமான ருக்குனாகத் தெரிந்தெடுத்திருக்கிறார்கள்.

ஷைக் குள்ரீ அவர்கள் மிஸரின் கியாதி வாய்ந்த உலமாக்களிலுள்ளவர்கள். அவர்கள் சென்ற மாதம் தாருல் பகாவை யடைந்து விட்டார்கள். இவர் ஷைக் அப்துஹூ மிஸரி அவர்களின் சிஷ்யராகும். ஜாமிஅ மிஸ்ரியாவில் சரித்திர போதகா சிரியராகவிருந்தார்கள். அவர் இயற்றிய பல அரிய கிரந்தங்களில் "தாரீகுல் இஸ்லாம்" என்பது அதிவிசேஷமானது. அதை டில்லி தேசீய யூனிவர்ஸிட்டி ஜாமிஅ மில்லியாவில் "தாரீகெ உம்மத்" என்ற பெயரோடு மொழிபெயர்த்திருக்கிறார்கள். இது யாவராலும் மதிக்கத்தக்க கிரந்தமாக விருக்கிறது.

ஹஜ்ரத் யூசுப் (அலை) கபர் பலஸ்தீனில் "ஷீன்ஹீம்" என்ற புராதன பட்டினத்தில் ஐரோப்பியர்கள் தோண்டிப் பார்க்கின்றனர். அது 40-நூற்

ருண்டுகளுக்கு முன்னம் கட்டப்பட்டதாக கருதப்படுகிறது. அதில் ஹஜ்ரத் யூசுப் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய கபரும், மற்றும் பனீஇஸ்ராயீல்களுடைய கபரும் தென்படுமென ஆராய்ச்சி செய்வோர் நினைக்கின்றனர்

87-வயதுடைய மாணவர். பிரான்ஸில் ஆபாக் என்ற பட்டணத்து "ஸோர்போன்" யூனிவர்ஸிட்டியின் பரீக்ஷைக்கு 87 வயதுடைய ஒரு மாணவர் வந்திருந்தார். அம்மாணவர் பிரான்ஸில் கியாதிபெற்ற மிஸ்யூலூயி அண்டரியா என்பவராகும். இவர் பிரான்ஸ் மாஜி பார்லிமெண்டு மெம்பரும் போலீஸ் கமிஷ்னரும், ஒரு தேசத்தில் பிரான்ஸ் பிரதிநிதியாகவு மிருந்திருக்கிருர். இவர் பரீக்ஷைக்கு ஆஜராகியதைஜனங்கள் ஆச்சரியப்பட்டு விசாரித்த போழ்து அவர் "என் வயது கிழமாகிவிட்டாலும், என் கல்விப்பிரியம் வாலிபமாகவிருக்கிறது" என கூறிஞராம். (என்ன ஆச்சரியம்! கெண்டைக்கால் அளவு தண்ணீரில் கெண்டைமீன் மல்லாந்து போகுவதுபோல், நம் முஸ்லிம்கள் ஒன்று, இரண்டு வகுப்பு படித்ததும் மல்லாந்து விடுகின்றனர். பர்.)

வரப்போகும் ராயல் கமிஷனில் 11 மெம்பர்கள் இருக்கவேண்டும். இரல் ஆப் அக்ஸபர்ட், மிஸ்டர் ரீம்ஸே மீக்டாண்லட், லார்ட் ஹ்யூக்ட் ஆக இம் மூவரில் எவராவது ஒருவர் அக்கிராசனராக விருக்கவேண்டும். ஹிந்துக்களில் (1) ரைட் ஆனரேபிள் ஸ்ரீநிவாச ஸாஸ்திரீ, (2) பண்டிட் மோதிலால் நேரு அல்லது மிஸ்டர் பட்டேல், (3) மிஸ்டர் N. C. கேல்கர், (4) மதன்மோகன மாளவியா இந்நான்கு பேருகளும், முஸ்லிம்களில் (1) ஸர் முஹம்மது ஹபீபுல்லா (2) மௌலாஞ முஹம்மதலி, அல்லது டாக்டர் அன்ஸாரி, (3) மிஸ்டர் ஜின்ஞ இம்மூவர்களும், ஐரோப்பியர்களில் ஸர் வில்லியம் வில்ஸண்ட், (2) ஸர் வில்லியம் மீர்ஸ் அல்லது ஸர் கேம்பல் ரூட்ஸ், (3) லார்ட் ரான்லட்ஷே இம் மூவர்களும் ஆக மேற்கூறி பத்து பேர்களும் மெம்பர்களாக இருக்க வேண்டுமென்று பாபூ ஜந்தர்லால் பானர்ஜீ அவர்கள் கூறியதாய் இங்கிலிஷ்மென் பத்திரிகை நிருபர் அறிவிக்கிருர்.

ரங்கீலா ரஸூலும், முஸ்லிம்களின் முயற்சியின் பயனும்.

—:o:—

அவசரச்சட்டம் பிறப்பிக்க அரசாங்கம் தீர்மானித்து விட்டது.

—o—

மார்க்க ஸ்தாபகர்களை தூஷிப்பது இனி தடுக்கப்படும்.

ஸிம்லா, ஜூலை

"மத ஸ்தாபகர்களை தூஷிப்பதைத் தடுக்கவும், தூஷிப்பவர்களைத் தண்டிக்கவும் விசேஷ அவசரச் சட்டம் ஒன்று ஏற்படுத்த இந்திய கவர்ன்மெண்டார் முடிவு செய்து விட்டார்கள்" என்று ஸிம்லாவிலிருந்து லாஹூர் "முஸ்லிம் அவுட்லுக்" பத்திரிகையின் காரியாலத்திற்கு டெலிபோன் மூலம் சமாச்சாரம் கிடைத்திருக்கிறது. (ஸை. இ.)